Vijaya Reghunatha Memorial Series No. 1.

# ஸ்ரீ தக்ஷிண கோகர்ண க்ஷேத்திர மான்மியம்.

இஃது
திருக்கோகர்ணம்:
பிரஹ்மஸ்ரீ
கோதண்டராம தீக்ஷிதரவர்களின்
குமாரன்:
T. K. ராமபத்திர சர்மாவினால்,
மொழிபெயர்த்து
வெளியிடப்பெற்றது.

---

1923.

காபி ரைட்] [இதன் விலை அணா 6.

## ரிக்விதாநம்—மந்திரகாமதேநு.

ஸ்ரீ சௌநகமுனிவரால் செய்யப்பெற்றதும், உயர்ந்த அழகான காயிதத்தில் ஸ்ரீ லக்ஷ்மீஸரஸ்வதிதேவிப் படங்களுடன் அச்சிடப்பெற்றதுமாகிய இப்புத்தகத்தின் பெருமையைப் பல பத்திரிகைகளும் மேதாவிகளும் பலவாறு புகழ்ந்து கூறுகின்றனர். ஆனால், இடமின்மைபற்றி "லோகோபகாரி" என்ற பத்திரிகை தெரிவித்துள்ள அபிப்பிராயத்தை மட்டும் இங்கு தெரிவிப்போம்.

"கீழ்நாட்டுத் தத்துவசாஸ்திர நுட்பங்களையும் புராதன நாகரிகவொழுக்கங்களையும் இது தாராளமாக வெளியிடுகின்றது. மனிதன் விரும்புகின்றவாறு அவன் இவ்வுலகிலேயே சகல சுகபோகங்களையும் அநுபவிக்கலாமென்றும், மனிதனுக்கு இன்றியமையாத கல்வி செல்வம் பூமி தனம் மனைவி மக்கள் புகழ் புண்ணியம் பெருமை இவையாவும் இன்ன இன்ன முறையில் தியானித்து முயன்றால் சித்திக்குமென்றும் இந்தக்கிரந்தத்தில் வெகு அழகாகவும் தெளிவாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை நமது நாட்டினர்யாவரும் படித்துப்பல நன்மைகளையும் பெறுதிருப்பது ஆச்சரியந்தான்."

இதில் ஒவ்வொரு புத்தகம்வீதம் ஒவ்வொரு பிராஹ்மணரும் வாங்கிப் படித்து நன்மைபெற முயலவேண்டும். விவசாயஞ்செய்தற்குச் சாவகாசம் கிடைத்தபிறகு பூமிவாங்கிக்கொள்வோம் என்று இருந்தால், நம்முடைய சாவகாசத்தை எதிர்பார்த்து நமக்கு நல்ல பூமியாக வலுவில் வருமென்று எதிர்பார்ப்பதும் சிரமமானகாரியந்தான்! ஆகவே, 'அருமையான புஸ்தகரத்தினம் கிடைத்தபொழுது அதனைவாங்கிவைப்பது அநேகமாக நன்மைதான்!

இதன்விலை ரு 1-0-0 தபால்செலவு ்-அணா பிரத்தியேகம்.

புத்தகம் வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிக் கொள்ளவும்.

மானேஜர்

ஸ்ரீ லக்ஷ்மி விலாசம்,

கொட்டாரக்கரை S. I. R.

## தேசிய கீதங்கள்.

"ஓடிவிளையாடுது சின்னப்பாப்பா!..................

இந்தசேதிகளைக்கேட்டிடுவாய் சின்னப்பாப்பா!"

என்று ஆரம்பிக்கின்ற பாப்பாபாட்டுகளும், நாட்டுப்பாட்டுகளும், படிக்கப்படிக்கத் தெவிட்டாத ஆனந்தமளிக்கும். 30, 40 விஷயங்களைப் பற்றிய இனியபாடல்கள் அடங்கியது.

புத்தகம் 1-க்கு விலை அணா 3.

இப்புராணத்திலடங்கிய

# அத்தியாயக் கதை வரலாறு.


| அத்தியாய எண். | விஷயம். | பக்கம். |
| --- | --- | --- |
| 1. | க்ஷேத்திர மாகாத்மிய முரைத்த அத்தியாயம் | 1—6. |
| 2. | பிரமதேவருக்கு ஆங்காரமெழுந்து—பின்னர் உண்மையுணர்ந்து ஈசனை நேசமுடன் சரண் புகுந்த அத்தியாயம் | 6—12. |
| 3. | அசரீரி வாக்கு, பிரமன் தவம், ஈசன் மறுமொழி கூறுமத்தியாயம் | 12—17. |
| 4. | ஸ்ரீதேவி பூதேவியரின் சாபநீக்க முரைத்த அத்தியாயம் | 17—19. |
| 5. | ஸ்ரீதேவி பூதேவியர்க்கு ஈசன் காட்சியளித்த அத்தியாயம் | 19—21. |
| 6. | ஸ்ரீமகா விஷ்ணுவின் வருகை, ஸ்ரீதேவி பூதேவியரின் திருக்கல்யாணம், லக்ஷ்மி தேவி துதித்தல் ஆகிய இவை விளக்கும் அத்தியாயம் | 21—24. |
| 7. | கபிலையின் வருகை, கபிலையின் வேண்டுகோள், கபிலையின் கங்கை யாத்திரை, கபிலையியற்றிய சிவ பூஜை, கபிலை செய்த அரிய துதி இவையுரைக்கும் அத்தியாயம் | 24—28. |
| 8. | புலியின் தோற்றம், கபிலைக்கும் புலிக்கும் நிகழ்ந்த சம்பாஷணை, கபிலையின் சபத மொழி இவை கூறும் அத்தியாயம் | 28—32. |
| 9. | பசுவின் பிரார்த்தனை, புலி மறைந்து புவனேசன் காக்ஷி, மகேசன் திருவாக்கு, தேநுவின் துதி முதலியன கூறும் அத்தியாயம் | 32—35. |
| 10. | சித்தர் வசிக்கும் சிறந்த மலைகளை விளக்கும் அத்தியாயம் | 36—37. |
| 11. | தீர்த்தங்களின் பெருமையைத் தெளிவிக்கும் அத்தியாயம் | 37—40. |
| 12. | ஸ்தல விசேஷமுரைத்த அத்தியாயம். | 41—44. |

# அடிக்குறிப்புகளின் அட்டவணை.


| | |
|---|---|
| சூத புராணிகர் (பக்கம்) | 1. |
| தீர்த்தங்களின் சிறுனப்பயனைப்பற்றிய ஆராய்ச்சி | 3—5. |
| 30 கல்பங்களும், மனித ஆயுளும், 26 நாட்களுக்கு முற்பட்ட பூஜையும் | 7—9. |
| பகவான் என்பதன் பொருள் | 9. |
| மூவகைப் பிறவி | 10. |
| முப்புர சரிதம் | 11. |
| ஸாஷ்டாங்க வணக்கம் | 15. |
| பராபக்தி (அல்லது பேரன்பு) | 16. |
| குரோச அளவு | 18. |
| கருத்து நிறைந்த கூற்று | 20. |
| குடுமிமாமலையில் மலர்மாலை மறைந்து மன்னன் மகேசனது முடி கண்ட காட்சி | 25—26. |
| தக்ஷன் செய்த யாகக்கதை | 28. |
| ஆலகால விஷம் | 28. |
| மலையை வலம் வருதல் மஹா விசேஷம் | 36. |
| வாஜபேயம் | 39. |
| அசுவமேதம் | 39. |
| சந்திரமண்டலம் புகுவோர் | 40. |
| வாமன புராணத்தின் ஒரு குறிப்பு | 40. |

# முகவுரை.

இந்த க்ஷேத்திர மாஹாத்மியமானது ஸம்ஸ்கிருதத்தில் ஸ்ரீ வேதவியாச முனிவரால் இயற்றப்பெற்ற "ப்ரஹ்மாண்ட புராணம்" "ஸ்காந்த புராணம்" என்பவற்றில் கூறப்பெற்றது. 12 அத்தியாயங்களால் முற்றுப்பெற்ற இத்தல மான்மியத்தில் பலஅரிய தர்மரஹஸ்யங்கள் காணப்படுகின்றன.

"ஸ்தல மாகாத்மியங்கள் யாவும் ஸ்காந்தபுராணத்தைச் சேர்ந்தன" என்று பெரியோர் கூறுவராயினும், இதுபோன்று சிறிய உருவத்தில் அரிய பெரிய தத்துவார்த்தங்களைத் தன்னுள் அடக்கியுள்ள க்ஷேத்திர புராணங்களே பசுமரத்தாணிபோல ஜனங்களின் மனத்தில் பக்திஞான தர்மகுணங்களைப் பதியச்செய்கின்றன என்பது மிகையாகாது.

இப்புத்தகத்தில் வருணிக்கப் பெறுகின்ற ஸ்ரீபிருஹதம்பாளின் கருணையை உலகம் நன்கறியும். ஆனால், கருணையிற் பெரியநாயகியாராகிய அவ்வன்னையார் தமது அர்ச்சகவடிவம் பூண்டு அன்றிரவிலே—எனது கனவிலே—தோன்றி, "எனது தரிசனம் புரிய எழுந்துவா" வெனப் பரிந்தழைத்து, எனது பழவினைகளையெலாம் பகலவன்முன்னே தோன்றிய பனிக்குவியல்போல் நீக்கியருளிய அரும் பெரும்செயலை அனைவர்க்கும் விளக்கவேண்டுமெனக் கருதி அவ்வன்னையாரின் அருட் சாதுரியத்தை இவ் அவனியில் (பூமியில்) உள்ளோர் யாவரும் அறிந்து ஆனந்தித்து என்போன்று எல்லா நலனும் பெறவேண்டுமென ஆவல் கொண்டு, அன்னையின் சரிதையை அனைவரும் படித்து மகிழுமாறு ஸம்ஸ்கிருதத்திலிருந்த ஏட்டுப் புத்தகத்தை யாராய்ந்து, படிப்பதற்கினிய பசுந்தமிழ் நடையில் எழுதிப் பூர்த்திசெய்துள்ளேன்.

"பசியுள்ளவருக்குப் பக்குவமற்ற அன்னமும் பெருஞ்சுவை வாய்ந்த தேவாமிர்தம் போல் தோன்றுவது இயல்பாதல்

போல்" ஸ்ரீ பிருஹதம்பிகைத்தேவியாரின் அருட்பிரசாதத்தை அகத்தியம் பெறவேண்டுமெனப் பேராவல் கொண்ட பக்தர்களாகிய பெரியோர்கள் யாவர்க்கும் இந்தச் சிறு மொழிபெயர்ப்பு நூலே அவர்களின் விருப்பங்களை யெல்லாம் பூர்த்திசெய்யத் தக்க சிந்தாமணி யெனத் தோன்றுமென்பது திண்ணம்.

நான் இவ்விதம் எழுதுவதற்கேற்பக் கபிலைக்காமதேனுவும் இத்தலத்திலேயே பலநாளும் வசித்துப்பூசித்து இங்கு ஈசனைநேசமுடன் வணங்குவோர்க்கெல்லாம் வரந்தரும் வள்ளலாகிய வகுளேசன் தமது கருணையை 'இன்னும் விரைவில் வழங்கவேண்டு" மெனும் வரத்தையும் நம்மனோர்க்கென்றே பெற்றிருக்கின்றாளன்றே? அன்று அந்தக் கபிலைக்காமதேனுவுக்கு கோகிருபாநாதனருளிய திருவாக்கு நமக்குத் துணையாக நிற்கின்றதென நம்புவோர்க் கெல்லாம் இன்றும் என்றும் யாதொரு குறைவும் வாராதென்பது திண்ணம்! திண்ணம்!! முக்காலமும் திண்ணம்!!! எனவே, அவ்வருட்பெருமானது திருவிளையாடல்களை அழகாக எடுத்துரைக்கும் வடமொழிப் புராணத்தைத் தக்கோர்மூலமாக ஆராய்ந்து-ஒரு சிறுபதமும் விடாது- தாதுப்பொருளோசை குன்றாது-அப்போறிவாளனின் பிரேரணையினால் எனது சிற்றறிவாகிய மின்மினிப் பிரகாசத்தில் விளங்கியவாறு மொழிபெயர்த்தேன்.

இதில் பக்தி, ஞானம், தர்மம், குணவொழுக்கம், ஈசன்திருவிளையாடல், அனுக்கிரக ஆசிமொழிமுதலிய சிறந்த விஷயங்கள் காணப்படுமாயின், அவை எனது அருள் மூர்த்தியாகிய ஸ்ரீபிருஹதம்பாளின் கருணைக்குரியவை யென்று மகிழ்ந்தும், இதில் சொற்பிழை, எழுத்துப்பிழை, கருத்துப்பிழை, ஓசைப்பிழை முதலிய மனிதச்செயல்கள் மலிந்து காணப்படுமாயின், அவை எனது சொந்தப் பொருள்களென்று மறந்தும், படிப்போர் கருதுமாறு வேண்டுகின்றேன்.

"பாத்திரம் மட்பாத்திரமாயினும் அல்லது பொற் பாத்திரமாயினும் அதனிலுள்ள பால்தான் பசியைத் தணிக்கும்" என்று பெரியோர் கொள்கின்றனர். அதுபோல, தமிழில் வெளியான நூலாயினும் அல்லது ஸம்ஸ்கிருதத்தில் பிரசாரமான புத்தகமாயினும் அதனிலுள்ள விஷயங்களாகிய பொருள்களின் அருமை

யையே உலகம் போற்றுமென்று நம்புகின்றேன். இந்த நியாயம் பொருத்த முள்ளதுதான் என்று அன்பர்கள் அங்கீகரிப்பதானால், ஸம்ஸ்கிருதத்திலுள்ள இத்தல புராணமுதனூலை வெளியிட இயலாத இத்தருணத்தில்—அடுத்துவருகின்ற திருவிழாவின் தருணம் நோக்கித் தமிழில் மட்டும் இப்பொழுது—வெளிவருகின்ற இந்நன்னூலை நமது தமிழ்நாடு நன்கு அங்கீகரிக்குமென நான் நம்புவது ஏமாற்றமான செயலன்று! பூவினுள் புகுந்துகொண்ட நாரினுக்கும் நன்மதிப்பேற்படுவது நம்மனோரனுபவமாதலால், அன்னையின் தண்ணருளைநாடி வெளிப்பட்ட எனது புன்மொழி நாவினுக்கும் நன்மதிப்பு ஏற்படுதல் நியாயவரம்பை மீறினதன்று என்றுதான் சொல்லிக்கொள்ளுகின்றேன்.

கல்வியறிவொழுக்கங்களிலும், ஸ்ரீபிருஹதம்பாளின் கருணைச் செல்வத்தைப் பெறுவதிலும் பசுவினுக்குக் கருணைசெய்த பரமனின் தயையைப் பங்குகொள்வதிலும் "நான் முன்! நான் முன்!" என விரைந்து முன் வருகின்ற பொருட் செல்வவான்களினுடையவும், அன்பர்களினுடையவும் ஆதரவு எனக்குக் கிடைக்கும் பொழுது இந்த ஸ்தலபுராணத்தின் ஸம்ஸ்கிருத புஸ்தகத்தையும் நான் உடன் அச்சிடுதற்குத் தயாராயிருப்பது பெரிதல்லவே! ஆதரவளிப்போர் அபிப்பிராயந் தேரிவிப்பின், அடுத்த சில நாட்களில் அப்புத்தகம் வெளியிடுதற்கே நானும் ஆவலோடு—ஆர்வத்தோடு—தயாராயிருக்கின்றேனென்பதை அறிஞர்களுக்குப் பணிவுடன் அறிவித்துக்கொள்ளுகிறேன்!

நமது புதுக்கோட்டை ராஜ்பத்தில் வசிப்பவரன்றாயினும், ஸ்ரீ பிருஹதம்பிகைத் தேவியாரின் காருண்ய ஆட்சிக்குட்பட்ட செல்வத் திருநகர்களி லொன்றாகிய கோட்டையூர் என்னும் ஊரிலே வயதுருவத்திற் சிறியராய், அன்பு கருணை பரோபகாரம் தெய்வபக்தி முதலிய ஆன்மகுணச் செல்வத்திலே சிறந்தோராய் விளங்குகின்ற அன்பர் ஸ்ரீமான் பேரி. நா. லே. லக்ஷ்மணஞ் செட்டியார் என்னும் நல்லாருள்ளத்தின் வழியே ஸ்ரீபிருஹதம்பாளின் கருணைச் செல்வம் வெளிப்பட்டு இத்தல புராணத்தைச் செந்தமிழ் நாட்டினர் யாவரும், தமிழறிந்த ஆண் பெண் அனைவரும் ஆதரவுடன் படித்துக் களிக்குமாறு அருள் செய்தது. இதுபோல் இதன் ஸம்ஸ்கிருத நூலையும் வெளியிடுமாறு செய்தற்குரிய பெருங்

கருணைச் செல்வத்தை எனது அருளன்னைப் பெரிய நாயகியார் எவர்க் களிக்கவேண்டுமெனத் திருவுளங்கொண்டுள்ளனளோ! அன்னையின் உள்ளக்குறி உள்ளன்புடையோர்க்கே விரைவில் தோன்றும்!

இவ்வரிய கைங்கரியத்தை எவர் செய்யினும் யான் வடமொழிப் புத்தகமளிக்கக் காத்திருக்கின்றேன் என்பதை மீண்டுந் தெரிவிக்கின்றேன். இவ்வடமொழிப் புத்தகமானது திருக்கோகர்ண க்ஷேத்திரத்தில் முன்னர் நமது புறக்கண்களுக்குந் தோன்றுமாறு தூலவுடம்போடு விளங்கிவந்தவர்களும், இப்பொழுது புகழுடம்பு பூண்டு நமது அகக்கண்காட்சிக் குரியராகவே விளங்கிவருபவர்களுமாகிய (1) பிருஹ்மஸ்ரீ நாகசுந்தர சாஸ்திரிகள் அவர்களாலும், (2) பிற்காலத்தில் ஸ்ரீமத் பரமஹம்ஸ ஸ்வருப ஆசிரமம் பெற்று விதேஹமுக்த ஸ்வருப ஸமாதி யனுபவ நிஷ்டர்களாகிய பிருஹ்மஸ்ரீ யஜ்ஞ தீக்ஷித வித்வன்மணி அவர்களாலும் முறையே கையாளப்பெற்றுப் பிரவசனம் செய்யப்பெற்றதுமாகும்.

மிகப் பழமைவாய்ந்த இத்தல புராணத்தில் எழுதியோர் பிழையாகக் காணப்பட்ட (எழுத்துக்) குற்றங்களையும் பெரியோர் முன்னிலையில் பரிஹரிக்கவேண்டுமெனப் புதுவைமாநகர் ஸமஸ்தானவித்வத் ரத்நமும், வேதசாஸ்திர பாண்டித்தியத்துடன் பெரியோர்க்குரிய ஸத்குண ஸதாசாரங்கள் யாவும் அழகுபெற அமையப்பெற்ற அரிய குணஸ்ரீமானுமாகிய பிருஹ்மஸ்ரீ விசுவநாத சாஸ்திரிகள் அவர்களின் முன்னிலையில் கண்ணோட்டமிடப் பெற்றதாதலின், அம்முதனூலானது செதுக்கப்பெற்ற நவரத்தினம்போல் சுத்தமாக இலங்குவது என்றும் தெரிவித்துக்கொள்ள எனக்கு உரிமையிருக்கின்றது.

புதுக்கோட்டை ஸமஸ்தானத்தின் தானாதிகார ஸ்தானம் வஹிப்பவர்களும் ஸ்ரீ காசியிலுள்ள பாரத தர்ம மஹாமண்டலத்தினரால் நற்புகழ்ப்பட்டம் (பிருது) அளித்து கௌரவிக்கப்பெற்ற பிரபலப் பெரியோருமாகிய இந்நல்லார் தெரிவித்தவண்ணமே ஸம்ஸ்கிருத புராணத்தினோடு சேர்த்துப்படிப்போர்க்கும் பயன்தரவேண்டுமெனக்கருதித் தனித் தனியே சுலோக எண்கள் இடப்பெற்றன. ஆனால், அச்சுக்கூடத்தின் சௌகரியக் குறைவினால் கிரந்த சுலோகத்தை ஒருபுறத்திலும், அதன் தமிழ்மொழி பெயர்ப்பை மற்றோர்

புறத்திலுமாகப் போடக்கூடவில்லை. எனினும், இனி யச்சிடவிருக்கின்ற கிரந்தபுஸ்தகத்தை இதே எண்களுடன் வெளியிடத் தீர்மானித்திருக்கின்றேன். இனி, இம்முகவுரையில் நான் தெரிவித்துக் கொள்ளதக்கது—நான் விரும்புவதுபோல்-அன்பர்களால் ஆதரிக்கத் தக்கதும், நமது நன்றியறிதலுக்குரியதுமான ஒரு முக்கிய சந்தோஷச்செய்தியாகும். அதனை தெரிவித்துக்கொண்டு இம்முகவுரையைப் பூர்த்திசெய்ய விரும்புகின்றேன். அதாவது:-“தமது பிரஜைகளிடத்துப் பேரன்பு நிறைந்தவரும், உலகிலுள்ள அரசாங்கங்களை யெல்லாம் உற்றுநோக்கி அவற்றிற் காண்கின்ற உயரிய நற்செயல்களை யெல்லாம்தமது அன்பார்ந்த குடிகளின் நன்மைக் கெனவே விரும்பித் தினந்தோறும் புதிய புதிய கல்வித்தொழில்சுகாதாரச் சீர்திருத்த முறைகள் யாவற்றையும் தாராளமாயனுஷ்டித்து நன்மைபெறுமாறு கட்டளைபுரிந்து, அல்லும் பகலும் பிரஜைகளினது கல்வி செல்வ சுகவாழ்வு முன்னேற்றத்திலேயே தமது மனப்பூர்வமான விருப்பத்தைச் செலுத்தி வருபவருமாகிய நமது அரசர்பெருமான், His Highnes. Sri Bruhadambal, Dasa Raja Marthanda Bhairava Tondiman Bahadur G. C. I. E. Raja of Puducottah. அவர்களின் அரிய சகோதரரும், அவர்களைப்போன்று அன்பு ஆதரவு, இனியமொழி, ஈகை, உண்மையூக்கம் குடிகள் எல்லோரையும் சமமாகப்பாவித்து நடாத்தும் திறமை, நியாயமுறையில் நடு நிலைமை தவறாது பிரஜைகளின் மனவிருப்பமாகிய தராசு முனைகோணாது செங்கோல் செலுத்தும் வல்லவரும், அரசர்க்குரிய நற்குண நற்செயல்களியாவும் பிறவிச் செல்வ மென அமையப்பெற்றவரும், எப்பொழுதும் நமது உள்ளத்திலும் வெளியிலும் அடுத்திருந்து நம்மை யன்போடு ஆளவேண்டு மெனும் ஆவல் நிறைந்தவரும் இப்பொழுது நமது அரசர் பெருமானின் பிரதிநிதி ஸ்தானம் வகித்து விளங்குபவருமாகிய மஹாராஜராஜஸ்ரீ ரீஜன்ட் ஸாஹேப் விஜய ரகுநாத துரைராஜா அவர்கள் B. A., ஸ்ரீபிருஹதம்பாளின் கருணை கடாட்சத்தால் இந்த ஸ்தானம் பெற்றதன் அறி குறியாக இப்புத்தகம் வெளியிடப் பெறுகின்றது.

கனம் ரீஜன்ட் ஸாஹேப் அவர்கள் கல்விச்செல்வம், பொருட் செல்வம், குணச்செல்வம், புகழ்ச்செல்வம் முதலியவற்றால் ஒப்பற்று விளங்குவதுபோல் அவர்கள் எந்நாளும் ஸ்ரீ பிருஹதம்பாளின்

அருட்செல்வத்திற்கும் மேன்மேலும் உறைவிடமாகி என்றும் குன்றாத சுகாரோக்ய சுகிர்தப் பெருவாழ்வுபெற்று மகிழுமாறு உலகின் அன்னையாகிய ஸ்ரீபிருஹதம்பிகைத் தேவியாரின் கருணையினிடத்துப் பிரார்த்தனை புரிந்துகொள்வோம்" என்பதே.

இப்புத்தகத்தில் சேர்க்கவேண்டுமென விரும்பிய திருவுருவப் படங்கள் அடுத்த பதிப்பில் சேர்க்கப்பெறும்.

தி. கோ. ராமபத்ர சர்மா,
"அகஸ்தியன்"
ஆசிரியன்.

கொட்டாரக்கரை,
5—8—23.

உ

ஸ்ரீ:

# தக்ஷிண கோகர்ண க்ஷேத்திர மான்மியம்.

## மங்கலம்.

ஸ்ரீ சந்திரன்போன்ற திருமேனி நிறமுடையவரும், வெண்மையான வஸ்திரந் தரித்தவரும், எங்கும் நிறைந்தவரும், நான்கு புஜங்களுடன் விளங்குபவருமாகிய யானைமுகக் கடவுளை எல்லா விக்கினங்களும் நீங்கி எடுத்த காரியம் இனிது முடியும்பொருட்டு, தியானிக்கவேண்டும்.

## சௌனகர் முதலான முனிவர்கள் ✠ ஸூத புராணிகரை நோக்கிக் கூறுதல்.

சகல சாஸ்திரங்களிலும் வல்லமைபெற்று எல்லாமுணர்ந்துள்ள சூத முநிவ! தமது திருவாக்கால் புண்யஸ்தல மகிமைகள் பலவற்றை நாங்கள் உணரப்பெற்றோம்; (1) (அந்தத்தலமான்மியங்களின் வாயிலாய்) பற்பல தர்ம அதர்மங்களும், சுவர்க்க நரக பேதங்களும், பாவ புண்ணியங்களின் பாகுபாடுகளும், அநேகவித தான வகைகளும் (கொடையளிக்கும் முறைகளும்) பல பல யாக வேறுபாடுகளும், புண்ணியமளிக்கும் சிவ விரதங்களும் (தூய்மைதரும் நோன்புகளும்) சிவபெருமானின் பெருமையுமாகியவற்றை உணர்ந்தோம். (3) இப்பொழுது, 'ஸ்ரீ தக்ஷிண கோகர்ணம்' (தென் கோகன்னம்) என்னும் மற்றோர் பெயரால் பிரசித்தி பெற்றுள்ள மகிழவனமகிமை எத்தகையது? அங்குள்ள தீர்த்தங்களின் பெருமை யாது? என்னும் இவற்றைத்தாம் சிறிதும் விடாது

---

✠ ஸூத புராணிகர்: இவர் பதினெண் புராணங்களையுமியற்றியருளிய ஸ்ரீ வேதவியாசரின் மாணாக்கர். பதினெண் புராணங்களையும் விளக்கி முநிவர்களுக்கு உபதேசித்துவருமாறு வியாசரால் கட்டளையிடப்பெற்று அவ்வாறே செய்துவருபவராதலின் இவர்க்குச் "சூதபுராணிகர்" (புராணங் கூறும் சூதர்) என்று காரணப்பெயர் வழங்கிவருகின்றது. முன்னர் ஒரு காலத்தில் முநிவர்களெல்லாரும் பிரமனிடஞ்சென்று, கலியின் குணங்

கருணையினுற் கூறி, எம்மை (எம்மைப்போன்று மோக்ஷம் விரும்புவோரை) ப்பிறவிப் பெருங்கடலினின்றும் கரை சேர அருள்புரிவீராக" என வேண்டினர். (5)

அவ்வாறு வேண்டி நின்ற முனிவர் கூட்டத்தை நோக்கி,

சூதர் கூறல்:—

முனிவர்களே! யானும் நீங்களும் இப்பொழுது புண்ணியவான்களாயினேம்! [எவ்வாறெனின்] நீங்கள் இப்பொழுது மிக்க உத்தம ஸ்தலமாகிய தென் கோகர்ண (க்ஷேத்திர)த்தைச் சிந்திக்குமாறு (ஸ்மரிக்குமாறு) செய்தீர்களன்றோ? (6) எனவே, நமது பாக்கியம் அளவிடற்கரியது!

அந்த க்ஷேத்திரத்தின் மகிமையை (முழுதும்) எடுத்துக் கூற இவ்வுலகில் எவராலாகும்? (ஆயினும்) முனிசிரேஷ்டர்களே! யான் எனது சக்திக்கேற்ப, அதன் பெருமையைச் சிறிது கூறுகின்றேன். (7) முக்தியை விரும்பி நிற்கும் முனிவர்களாகிய நீங்கள் முழுக்கவனத்துடன் (மன அமைதியுடன்) அதனைக் கேட்பீர்களாக. (7½)

காவிரியாற்றின் தென்கரையில் (அன்பரைக் காக்கவேண்டி அல்லும் பகலும்) சூலாயுதத்தைக் கரத்திலேந்தித் திருவானைக்காவின்கண் விளங்குகின்ற ஸ்ரீ ஜம்புநாதப் பெருமானுக்குத் தென்கிழக்கிலும், பூசண்டகிரி என்னும் பேரையூருக்கு வடகிழக்கிலும் வகுளாரண்ணியம் (மகிழங்காடு) என்னும் புனித ஸ்தலமானது சித்தரனைவராலும் போற்றப்பெற்று விளங்குகின்றது. அங்கு ஈசன்

---

கள் தம்மைப்பற்றுவண்ணம் வசித்தற்குரியதோர் புண்ணியவனத்தைத் தமக்குத் தெரிவித்தல்வேண்டுமெனக் கேட்க, அப்பொழுது பிரமன் மனோமயசக்கிரமொன்றைப் படைத்து அதனை உருட்டிவிட்டு "இது எந்த இடத்தில் சென்று கழுவிக்கழன்று விழுகின்றதோ அதுவே நீங்கள் விரும்பிய குணமுள்ள புண்யவனமாகும்" எனக்கூற, முனிவர்களும் அந்தச்சக்ரத்தைத் தொடர்ந்து சென்றனர். அஃது ஒரு வனத்திற்சென்று விழவே, அதனை முனிவர்கள் தமது வாசஸ்தலமாகக்கொண்டனர். அங்குத்தான் பல வருஷக் கணக்கில் நிறைவேற்றத்தக்க யாகங்களை முனிவர்களியற்றினர். சூதர் புராணங்கூறியதும் அங்குத்தான். நிமி என்பது, வடமொழியில் சக்கரத்திற்கு (உருளைக்கு)ப்பெயர்; அஃது கழன்று உருக்குலைந்த இடம் நைமிசம், எனவே நைமிசம் என்பதும் காரணப்பெயரேயாம்.

வகுளேசன் (மகிழவன நாதன்) என்னும் பெயர்கொண்டு, 'கல்யாணசுந்தரீ' (மண வழகியாள்) என்னுங் காரணப்பெயர் புனைந்த தம் தேவியாருடன் பெருங் கருணைபூண்டு (அருள் சுரந்து) விளங்குகின்றார். அவ்வீசனைத் தரிசனஞ்செய்த மனிதன் பாவத்தினின்றும் விடுபடுகின்றான். (10½) [கண்டோர் கலியைக் கணத்தில் தீர்க்கும் காருணய மூர்த்தியாகிய] அவ்வீசனது சந்நிதியில் "மங்களதீர்த்தம்" என ஒரு தீர்த்தமுளது. அந்தத் தீர்த்தத்தில் விதிமுறைப்படி ஸ்நானஞ்செய்த மனிதன் தாணியில் மீண்டும் மாதாவின் உதரத்தையடைகின்றானில்லை. (11½) அங்கு மாசிமாதத்தில் முறைப்படி மூழ்குபவரும், தைமாதப்பிறப்பு (உத்தர அயநம்) ஆடி மாதப்பிறப்பு (தக்ஷிண அயநம்) சாதாரண மாதப்பிறப்பு, சூரிய கிரஹணம், சந்திர கிரஹணம், ஆகிய இவற்றில் நீராடியவரும், (மனத்தூய்மை பெறுதலின் வாயிலாய்) ✕ தருமம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்னும் புருஷார்த்தம் நான்கினையும் பெறுமாறு வகுளேசன் அருள்செய்கின்றார். (13)

---

✕ இங்கு மூலத்தில் "இத்தீர்த்தத்தின்கண் ஸ்நானஞ்செய்தோர்க்கு ஈசன் அறம்பொருள் இன்பம் வீடு நான்கினையுந் தருகின்றார்" எனக் கூறப்பட்டுளது. அதன்பொருள் யாது? என்பதை இவவிடத்துக் கவனித்தல்வேண்டும். "ஒருவருக்கும் நாம் ஒன்றும் நல்கலம; உணர்வின் வண்ணமே உயிர்கள் எய்துப" என்பது ஈசனுடைய உண்மையான திருவாக்காகும். இதனை நோக்குங்கால் 'ஜீவர்கள் தம்தம் கருமத்திற்கேற்பப் பயன்களையடையுமாறு ஈசனது கட்டளை ஏற்பட்டுள்ளதென'வே பொருளாகின்றது. அக்காரணம்பற்றியே ஈசன் ஒருவரிடத்தும் பக்ஷபாதங்கொண்டு அவரவர் கருமத்தை மீறி ஒன்றனையுமளிக்கின்றாரில்லை எனவும்பொருள் தோன்றுகின்றது. ஆனல் இந்நூலின்கண் "இத்தீர்த்தத்தில் மூழ்கினோர்க்கு ஈசன் நாற்பயனையும் அளிக்கின்றார்" என வியாசர் வாக்குத் தோன்றியிருத்தலின், இதன் பொருளை ஸ்ரீசங்கராசார்யசுவாமிகள் அருளிச்செய்தவண்ணம் வேறோர் முறையாகக் கொள்ளவேண்டும். அஃதாவது: புண்ணிய தீர்த்தங்களில் மூழ்கிப் பெரியோரைச் சேவிப்போர் "மனத்தூய்மைபெறுதலின் வாயிலாய்" எல்லா நன்மைகளையும் எய்துகின்றனர்; எனத்தெளிதல்வேண்டும். அன்றியும் இங்கு வேறுசில வகையாய்ப்பொருள்கொள்வதும் பொருந்துவதாம்; அவை:

(1) புண்ணிய பாவச்செயல்களைப்புரிந்தோர் அவற்றிற்கேற்ற பயன்களாகிய சுக துக்கங்களை (இன்பதுன்பங்களை) அனுபவித்தே தீரவேண்டும்: அவை அவ்வவற்றிற் கேற்ற பயன்களை யனுபவித்தாலன்றி வேறு எக்காரணங்களாலும் நீங்கயாட்டா என்பது கேவலகர்மவாதிகளின்

கிருதயுகத்தில் பிரம்ம தேவரால் பூஜிக்கப்பெற்ற மஹேசன், அந்தப் பிரமதேவரின் கவலை நீங்கும்படி சிருஷ்டிக்குச் (படைத்தல் தொழிலுக்குச்) சாதனமான சக்தியைச் சந்தோஷத்துடன் அளித்தருளியதும் அங்குத்தான். அதனாலேயே மஹேசனைப் "பிரமனுக்குத் தலைவன்" என்றுலகினில் கூறுகின்றனர். (14½)

---

(தனிக் கர்மத்தையே மிகப் பலமாகக்கொண்டு வாதிப்போரது) கொள்கை; அவர்களின் அளவில் இஃது முக்காலும் உண்மையாம். நியதியின் வண்ணமேயாவும் நிகழ்வன என்ற கொள்கையினின்றும் அவர்கள் பிறழாதவரெனக் கூறப்படுகின்றது.

(2) இனி இரண்டாவது ஞானிகளின் கொள்கையாகும்; அது ஆன்மஞானத்தை அடைந்த அக்கணமே ஞானிக்குப்பிராரப்த வினையுள்பட (ஆகாமி, சஞ்சிதம்) மூன்று வினைகளும் அற்றுவிடுகின்றன வென்றும், அஞ் ஞானிகளின் அறிவுத்திடத்தைக் கருதியே வேதமானது ஞானிக்கும் பிராரத்தவினை உண்டெனக் கூறியதெனவும் ஸ்ரீ சங்கராசாரியார் ஆன்மபோதமென்னும் அரிய நூலினால் விளக்கியுள்ளதே போதியசான்றாம். ஆகவே, கர்மவாதி தன்னுடைய கர்மங்கள் அனுபவித்தாலன்றித்தீரா என்ற கொள்கை யுடையவனாதலின் அவனும், ஞானியோ தனது ஆன்மஞான வன்மையால்— (முற்பிறவியிற் செய்து இப்பொழுது அனுபவிக்கின்ற வினையும், இனி அனுபவித்தற் பொருட்டு எஞ்சி யுள்ளவினையும், இப்பிறவியிற் சம்பாதித்தவினைக் கூட்டமுமாகிய முக்குவியல்களும்—) தனது ஆன்மஞானத் தீயால் சுட்டெரித்துச் சாம்பராக்கப்பட்டன என நம்புவதால் அவனும் தம்முடைய வினைகளைப் போக்கிக்கொள்ள முயல்கின்றாரில்லை. எனவே, இவ்விருவரும் ஒழிந்து, எஞ்சி நிற்கின்ற பக்தன் ஒருவனே இத்தீர்த்தங்களினால் பெரு நன்மையைப் பெறுகின்றான்.

(3) உள்ளன்பு நிறைந்த பக்தன், அவ்வன்பின் மிகுதியால் நல்லோர் எங்கிருக்கின்றனர்? நற்றலம் எங்குளது? நற்றீர்த்தத்தினை எவருக் காண்போம்? என வேட்கை மிகுந்தவனாய் அவற்றைத்தேடி நாடுவான். நற்றலத்தையடைந்து பக்தி மிகுதியால் நன்னீராடுவான்; பெரியோரைப் போற்றுவான்; தன்னை மறந்து ஈசனைப் பூஜிப்பான். உள்ளன்பு நிறைந்த பக்தனின் ஒழுக்கமே ஒப்பற்ற சிவபூஜையாகும். பக்தியுடையோன் எந்தத் தீர்த்தத்தில் மூழ்கினும் அவனது பக்திமிகுதியால் ஈசன் மகிழ்ந்து, அன்பின் வசத்தராகி, அங்குக் கர்ம நியதியையுங் கடந்து தமது உள்ளத் தன்மையை மெய்யன்பனிடத்து வெளியிட்டுப்பக்தனது பூர்வவினைகளனைத்தையும் நீக்கிப் பரமபதத்தை அருளுகின்றார். அவ்வண்ணம் அரிய பக்தர்களுக்கு ஈசன் அருள்புரிந்த ஸ்தலங்களை புண்ணிய க்ஷேத்திரங்களென

திரேதாயுகத்தில் விஷ்ணுபத்நியாகிய ஸ்ரீ லக்ஷ்மீதேவியி னால் பூஜிக்கப்பெற்று, ஸ்ரீவர்த்தநேசன் (லக்ஷ்மீதேவிக்கு அநு க்ரஹஞ்செய்த வள்ளல்) என்ற புகழ்பெற்றதும் அங்குத்தான்; (15½) துவாபரயுகத்தில் 'காமதேனுவின் வம்சத்திற் பிறந்ததும்' ஸத்தியம், ஞானம் இவற்றிற் சிறந்ததுமாகிய கபிலை என்னும் பசுவானது உத்தம பக்தியோடு உலகேசனை ஆராதித்துக் கைவல் யம் (முக்தி) பெற்றதும் அங்குத்தான். (17) அவ்வாறு பசுவினுக் குக் கிருபைசெய்த காலம் (துவாபரயுகம்) முதல்தான் மஹே சனுக்குக் கோகிருபாகரன்' (பசுவினுக்குக் கருணைசெய்தோன்) என்று உலகினில் பெயர் வழங்குகின்றது. (17½)

கலியுகத்தில் அந்த க்ஷேத்திரத்தின்கண் மஹேசன் "மங் களர்" என்னும் மாமுனிவராலும், வியாக்கிரபாதர் (புலிக்காலர்) என்னும் பெரியோராலும், புகழ்பெற்ற சடைமுடிச் சித்தராலும், (ஜடிலராலும்) வசிஷ்டர் முதலிய முனிசிரேஷ்டர்களாலும் தினந் தோறும் பூஜிக்கப்பெறுகின்றார். (19)

ஆதலால் தனக்குவமையில்லாத பெருமையுடையவரும் வேண்டுவார்க்கு வேண்டியவண்ணம் வரந்தருவோரும் வருளவ

---

னப் பெரியோர்களால் போற்றப்பெறுகின்றன. மெய்யன்பர்களின் அடிச்சுவடு பதிந்துள்ள அத்தலங்களில் வாழ, கங்கை முதலிய புண்ணிய (தெய்வ) நதிகளும் தெய்வாம்சம்பெற்ற பெரியவர்களும், வலியவருவது இயற்கை. அக்காரணம் பற்றியே புண்ணிய ஸ்தலங்களிலுள்ள புண்ணிய தீர்த்தங்களில் மூழ்கிய பக்தர்களுக்கு அவர்கள் எத்தகைய பாவங்களைச் செய்திருப்பினும் தமது கருணையினால் அவர்க்கு நல்லறிவுதிக்கச்செய்து, சகல பாவங்களையும் நீக்கிப் பெரும் பதவி உதவுகின்றாரீசன். இங்குக் கூறிய காரணங்களால் கர்மவாதிகள் ஈசனை நியாயாதிபன் (தர்மராஜன்) என்றும், பக்தர்கள் மஹாப்பிரபு (நினைத்ததைக் கொடுக்கும் பெருவள் ளல்) என்னும் போற்றுகின்றனர். இவற்றால் பக்தி மிகுதியாக உள்ள விடத்து, சகல நியமங்களும் விதிகளும், அந்தப் பக்திக்கு எதிராக நிற்க முடியாது ஓடுகின்றன என்பதும், பக்தன் தான் நினைத்த பயனை ஈசன் அளிக்குமாறு செய்துவிடுகின்றானென்பதும், பக்தியே கல்பகவிருக்ஷம் போல் பக்தனுக்கு வேண்டிய பயன்களை அளித்துவிடுகின்றதென்பதும், கர்மத்தின் வன்மை பக்தரல்லாதவரையே பாதிக்குமென்பதும், பக்தன் மோக்ஷம்பெற ஒவ்வொரு க்ஷேத்திரமும் தகுதியுடையதாமென்பதும் பெ றப்படும்.

ணத்தில் வீற்றிருப்பவருமாகிய ஈசனை இவ்வுலகில் எவர் பூஜிக்கின்றனரோ அவர் சகல அபீஷ்ட சித்திகளும்பெற்று, மஹேசனுடைய பாதாரவிந்தங்களில் சலியாத பக்திபெறுவர். (20)

சௌனகர் முதலாகிய முனிவர்களே! தனது கதையைக் கேட்கின்ற சகல ஜந்துக்களையும் பரிசுத்தஞ்செய்வதும், சகல நற்குணங்களும் நிறைந்து விசித்திரமாய்த் தோன்றுவதும், அறிவைத் துலக்கி மோக்ஷ (ஆனந்த) மளிப்பதும் என் குருவாகிய வேதவியாச முனிவரால் கூறப்பெற்றதுமாகிய இந்த உத்தம இதிஹாசத்தை (கதையை) மன அமைதியோடும், அன்போடும் கேட்பீர்களாக. (21)

இவ்வாறு ✠ பிரமாண்ட புராணத்தில் தக்ஷிண கோகர்ண மாஹாத்மியத்தைக் கூறுகின்ற எண்பத்திரண்டாமத்தியாயமாகிய

முதலாம் அத்தியாயம் முற்றும்.

---

✠ இந்தப் பிரமாண்ட புராணத்தில் பல விஷயங்களைக்கூறி வருங்கால் இடையில் இத்தலமான்மியமுங் கூறப்பெறுகின்ற காரணங்கொண்டு முதனூலின் முறைப்படி இங்கு அத்தியாயத்தொகை வரையப்பெற்றது. இத்தல புராணம் 11 அத்தியாயமும் இவ்வாறே பல புராணங்களினிடையே கூறப்பெற்று இந்நூல் ஒன்றாகத் தொகுக்கப்பெற்றுள்ளதென அடுத்த அத்தியாயங்களைப் படிப்போர் எளிதிலுணருவர். ஆதலின் இனி முறையே அடுத்த அத்தியாயந் தொடங்கி இது முடியும்வரை முதனூலின் முறைப்படி பலபல அத்தியாயத்தொகையை வரையாது, இரண்டு மூன்று என்றெண்களே தொடர்ந்து வரையப்பெறும்.

## இரண்டாவது அத்தியாயம்.

முனிவர்கள் கூறுதல்:—

எல்லாமுணர்ந்த சூதமுநிவ! சிறந்த தவ விரதமுடையீர்! பசுவினுக்குக் கிருபைசெய்த பரமனின் மஹிமையை (கோகிருபாநாதன் பெருமையை) இனியும் விரித்துக் கூறுவீராக! (1)

சூதர் கூறுதல்:—

முநிவர்களே! கேட்போர் பாவத்தைத் தீர்த்துப் பரிசுத்தஞ்செய்பவரும், செல்வம் விரும்பினோர்க்குச் செல்வந்தந்தருள்பவரும், புத்திரனை வேண்டினோர்க்குப் புத்திரனையளிப்பவருமாகிய தேவதேவ பரமேச சூலபாணியின் கதையைக்கேளுங்கள். ($2\frac{1}{2}$)

முன்னர் (1) இரதந்தர கல்பத்தில் கிருதயுகம் நிகழுங்கால் பிரமதேவன், ஈசனுல் கொடுக்கப்பெற்ற சிருஷ்டித்தொழில் வல்லமையைப்பெற்று (இவ்வுலகங்களையெல்லாம் படைத்தனராயினும்) அவ்வீசனது மாயையினுல் (பிரமதேவருக்கு) அந்தச் சிருஷ்டித்தொழில் திறமை "எவரால் தமக்குக் கிடைத்தது?" என்னும் உணர்வு நீங்கி, இவ்வாறு தம்மனத்தில் எண்ணினுர்:—(4)

---

(1) ரதந்தர கல்பம்:— இஃது, சுவேதவராஹகல்பம் (1) நீலலோஹிதகல்பம் (2) வாமதேவகல்பம் (3) ரதந்தரகல்பம் (4) ரௌரவகல்பம் (5) பிராணகல்பம் (6) பிருஹத்கல்பம் (7) கந்தர்ப்பகல்பம் (8) ஸத்யகல்பம் (9) ஈசானகல்பம் (10) தியானகல்பம் (11) ஸாரஸ்வதகல்பம் (12) உதானகல்பம் (13) கருடகல்பம் (14) கூர்மகல்பம் (15) நரஸிம்ஹகல்பம் (16) ஸமாதிகல்பம் (17) அக்நிகல்பம் (18) விஷ்ணுஜகல்பம் (19) ஸௌரகல்பம் (20) ஸோமகல்பம் (21) பாவநகல்பம் (22) ஸுப்தமாலீகல்பம் (23) வைகுண்டகல்பம் (24) ஆர்ச்சிஷகல்பம் (25) வல்மீககல்பம் (26) வைராஜகல்பம் (27) கௌரீகல்பம் (28) மாஹேசுவரகல்பம் (29) பித்ருகல்பம் (30) எனும் முப்பது கல்பங்களில் மூன்றாவது கல்பமாகும். இப்பொழுது நடைபெறுவது சுவேதவராஹரின் கல்பமாதலின், இதற்கு மூன்று கல்பங்களுக்கு முன்னரே பிரமதேவர் இத்தலத்தைப் பூஜித்தார் என்பது பொருளாம். இதனை நோக்குமபொழுது நம்மனோர்க்குப் "பிரமதேவன் மூன்று கல்பங்களுக்கு முன்னரா பூஜித்தனர்?" என வியப்புத்தோன்றும். ஆயின்,

"நானே உலகத்தைப் படைக்கின்றேன்; அசைவன அசையாதன (சரம், அசரம்) என்னும் இருவகைப் பிராணி வர்க்கங்களுமடங்கிய இவ்வுலகனைத்தும் என்னால் படைக்கப்பெற்றது; எனக்கு மேற்பட்ட பிரபு வேறு எவருமில்லை" அகங்கார மேலிட்ட பிரமனுக்கு இவ்வாறு புத்தி (எண்ணம்) தோன்றியது. இந்தக் கர்வத்தினால் பிரமனின் மேதையும் (எவ்வளவு விஷயங்களைக் கூறினும்— படிப்பினும் அவற்றை ஒரே முறையில் புத்தியில்

---

இம்மூன்று கல்பங்களும் பிரமதேவர்க்கு மூன்று தினங்களேயாதலின் (மூன்று பகற்பொழுதேயாதலின்) யோசிக்குமிடத்து, வியப்புத்தோன்ற இடமின்று. இனி ஒருகல்பம் என்பது பிரமதேவனுக்கு எவ்வாறு ஒரு தினமாகின்றதென்பது பிற புராணங்களினின்றும் இங்கெடுத்துக் கூறப்பெறுகின்றது. மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாஹதம், விசுத்தி, ஆக்கினை என்னும் ஆறு ஆதாரங்களின் வழியே மனிதர்கள் தினந்தோறும் விடுகின்ற சுவாசத்தொகையாகிய இருபத்தி ஓராயிரத்து அறுநூற்றினை இருபதினாற்பெருக்கி வரும் வருடம் கலியுக வருடமாகும். (அவை 432, 000 வருடங்களாம்) அந்த மூச்சுக்காற்றினை நாற்பதினாற்பெருக்கிவருவது துவாபரயுகவருடமாம். (அவை 864, 000 வருடங்களாம்) அவ்வாசியை அறுபதினாற்பெருக்கி வரும் வருடம் திரேதாயுகவருடமாகும். (அவை 1296, 000 வருடங்களாம்) அதனை எண்பதினாற்பெருக்கி வரும் வருடம் கிருதயுகவருடமாகும். (அவை 1728, 000 வருடங்களாம்.) இந்நான்கு யுகங்களின் வருடங்களும் சேர்ந்தது ஒரு சதுர்யுகவருடமாகும் (அவை 4, 320, 000 வருடங்களாம். இந்தச் சதுர்யுகம் 71 கொண்டது ஒரு மந்வந்தரமாகும். (அவை 306, 720, 000 வருடங்களாம்) மந்வந்தரம் 14 கொண்டது (அதாவது ஸ்வாயம்புவர், ஸ்வாரோசிஷர், உத்தமர், தாமஸர், ரைவதர், சாக்ஷுஷர், வைவஸ்வதர், ஸாவர்ணி, தக்ஷஸாவர்ணி, ப்ரம்மஸாவர்ணி, தர்மஸாவர்ணி, ருத்ரஸாவர்ணி, தேவஸாவர்ணி, இந்திரஸாவர்ணி என்ற 14 மனுக்களின் ஆக்ஞிக்காலங்கொண்டது) ஒரு கல்பமாகும். இஃது பிரமதேவனின் ஒருபகலாம், இதனைக்காலமுங்கொண்டது இரவாகும். எனவே இவ்வண்ணம் முப்பது கல்பங்கொண்டது பிரமதேவருக்கு ஒரு மாதமாம். அத்தகைய மாதங்கள் 12 கொண்டது பிரமதேவருக்கு ஒரு வருடமாம். அவ்வாறான வருடங்கள் 100 செல்லுங்கால் பிரமபட்டம் விலகுவதாக இப்பொழுது பிரமதேவர்க்கு 50 வயது முடிந்து (அதாவது 100, 000, 000, 000, 000, 000 லக்ஷலக்ஷகோடிவருடஞ்சென்று) 51-வது வயது தொடங்கி, அதன் முதல்மாதத்தில் முதற்பதினைந்துநாளின் முற்பகலில் இரண்டாவது யாமத்தில் (ஒரு யாமம் என்பது 7½-நாழிகைகொண்டது) மூன்றாவது பாகம் (முகூர்த்தம்) நிகழ்கின்றது. ஆகவே பிரமதேவர் பூஜித்தகாலத்தை அவரது கால அளவையைக்கண்டு

பதித்துக்கொண்டு மீண்டும் மறவாதிருக்குந் திறமை) மழுங்கிற்று; (6½) இதனாலேயே இந்திரன் முதலிய சகல தேவர்களையும் முக்கண்படைத்த பரமேசுவரனையும் புல்லுக்கு நிகராகக் கருதினார் அந்த நான்குமுகங்களையுமுடைய சிருஷ்டிகர்த்தர். இந்த மதமானது மேலிடவே, அவர்க்குச் 'சிருஷ்டித்தொழில் புரியும் அறிவு, காரியம் (செய்யத்தக்கது), அகாரியம் (செய்யத்தகாதது) இவற்றையுணரும் திறன் ஆகிய இவைகுன்றி, அவர் குருடன் போலானார். (7½) [ இஃதிங்ஙனமாக ] உலகத்திற்கெல்லாம் நன்மை செய்துகொண்டு கைலாசகிரியில் வீற்றிருப்பவரும், உலகத்தின் தலைவரும், (1) பகவானும், உலகத்திற்கு அறிவூட்டி உலகத்தை நடத்திச்செல்பவருமாகிய (உலக குரு) சங்கரன், பிரமாவின் மனத்தில் முளைத்த எண்ணத்தையுணர்ந்து, "உலகத்தைப் படைக்கும் சாமர்த்தியத்தை—சக்தியை" அவரிடமிருந்து நீக்கிவிட்டார். (9)

(அப்பால்) தாமரை மலரில் வீற்றிருப்பவராகிய பிரமதேவன், தமது சிருஷ்டி சாதுரியம் குறைந்து—சிருஷ்டிகள் (படைக்கும் பொருள்கள்) வரவர விகாரமாகிவருவதைக் கண்டு—அவ்வாறு தம்முடைய தொழிலுக்கு இடையூறாகி நிற்கும் காரணத்தை மனத்தால் சிந்திக்கலானார். (10)

ஈசன், எக்காலமும் உண்மையான (அழியாத) ஆனந்த சொரூபியாகவும், இவ்வுலகத்துள்ள பிராணிவர்க்கங்களின் ஹிருதய கமலத்தில் ஸதாகாலமும் (இடையறாது) வீற்றிருப்பவராயும், அவற்றிற்கு எக்காலமும் நன்மைசெய்துகொண்டும் விளங்குகின்றாரென உணர்ந்தார்; படைப்பிற்குக் காரணமான மூலப் பிரகிருதியை(யும் அவ்வாறே ஜீவர்களின் சுபாவத்தையும்) பிரேரணை (ஏவுதல்) செய்பவரும் அவர் ஒருவரே எனக்கருதினார். அப்பால் தமது நிலையைக் குறித்து மிகுந்த விசனமுற்றவராய் ஈசனை ஹிருதயத்தில் தியானித்து இவ்வாறு கூறலானார். (11½)

---

நோக்குங்கால் மூன்று தினங்களேயாகின்றன என்பது ஆச்சரியமற்றதோர் விஷயமாம்.

(1) பகவான்:—ஜீவர்களின் உற்பத்தி, நாசம், அவற்றின் போக்கு, வரவு, அறிவு, அறியாமை என்னும் ஆறினையும் அறிபவர்; நிறைந்தசெல்வம், வீரியம், அழகு, புகழ், ஞானம், வைராக்கியம் ஆகிய ஆறுபகங்களையுடையவர் என்பது மொன்று.

பிரமதேவன் கூறுதல்:—

ஆஹா! என்ன ஆச்சரியம்! என்போன்ற (அதிகாரபதவிபெற்ற) புருடர்களாலும், மாயை கடக்க முடியாததாகின்றது; நான் முன்னர் சிவபெருமான் அருள்புரியும் வண்ணம் தவம்புரிந்தேன்; அத் தவங்காரணமாக மகேசன் மகிழ்ந்து எனக்கு நிகரற்ற சிருஷ்டி சாமர்த்தியத்தைத் தந்தருளினர். இப்பொழுது அதனை மறந்து மனதில் வீணுக(ப்பலபல) எண்ணினேன். அதாவது:— நானே இவ்வுலக முழுதையும் பற்பலவிதமாகப் படைத்தேன் என இவ்வண்ணம் தவருக எண்ணினேன். (14)

(1) முட்டையினின்று முண்டாவன, (2) வியர்வினுல் ஜனிப்பன, (3) பூமியைப் பிளந்து தோன்றுவன, (4) கருப்பையினின்றும் பிறப்பன என்னும் நால்வகை விசித்திர சிருஷ்டியையும் நானே செய்கின்றேன்; யாவும் என்னிடத்து நிலைபெற்றுள்ளன, என்னிலும் மேற்பட்டாரொருவருமில்லை" என நினைத்த மாத்திரத்திலேயே எனது சிருஷ்டி சாமர்த்தியமும் மறந்தொழிந்தது! இப்பொழுது ஈசன் செயல் முழுதும் உணர்ந்துகொண்டேன். (16) எனக்கு இவ்வாறு அகங்காரத்தைக் கொடுத்தவரும்

(1) முட்டையினின்று முண்டாவன:— பறவை, பாம்பு, முதலை மீன், ஆமைமுதலியன. இவற்றின் கருபேதம் 21 லக்ஷமாகும்.

(2) வியர்வினுல் ஜனிப்பன:— புழு, தேள் முதலியன. அவற்றின் அச்சுபேதம் 21—லக்ஷமாம்.

(3) பூமியைப்பிளந்து தோன்றுவன:—மரம், செடி, கொடி, புல் முதலியன. அவைகளும் 21—லக்ஷம் பேதமுடையனவாம்.

(4) கருப்பையினின்றும் பிறப்பன:— மனிதர் பசு முதலியன. அவையும் 21 லக்ஷம் யோனிபேத முடையனவாமெனக் கருடபுராணங் கூறும்.

எனவே, "முன்னர், சராசர வடிவமாய் விரிந்துள்ள உலகம்" என்றவிடத்து இத்தகைய 84 லக்ஷம் அச்சு, முகவுருவ வேறுபாடுகளையுடைய பிராணி வர்க்கங்கள் நிறைந்தது என்ற பொருள் வெளியாம். இனி, இவற்றில் 9 லக்ஷம் பிராணிகள் நீரில் வாழ்வனவென்றும், ஸ்தாவர (விருக்ஷ) வர்க்கங்கள் 20 லக்ஷமென்றும், கிருமிவகைகள் 11 லக்ஷமென்றும், பறவைகள் 10 லக்ஷமென்றும், பசுக்கள் (மிருகங்கள்) 30 லக்ஷமென்றும், மானிடர் 4 லக்ஷமென்றும் பெரிய விஷ்ணுபுராணங்கூறியது, இந்தச் சராசர வடிவமெனும் பதப்பொருளை விளக்கியதேயாகும்.

ஈசனே; இதில் சிறிதும் ஐயமில்லை. இந்த ஞானத்தை இப்பொழுது கொடுத்தவரும் அந்த ஈசனேயாகின்றார். ஆகவே, அவ்வீசனைச் சரண் புகுகின்றேன். (17)

### பிரமன் சரண் புகுந்த முறையை வருணித்தல்.

அண்டினோர் பாவத்தைத் தீர்க்கும் அண்ணலே! நன்மைகட்கெல்லாம் உறைவிடமானாய்! தேவர் தம் தலைவ! அழியாத நன்மையளிப்போய்! சுகந்தரும் ஈச! என்றும் அழிவற்றோய்! புன்முறுவலால் புரம் மூன்றையும் (1) எரித்த விநோத பராக்கிரம

---

(1) புரம் மூன்று:— இதனைத் திரிபுரர் எனவும், கூறுவதுண்டு. இதன் வரலாறு ஸ்ரீபாகவதத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. முன்னர் ஒரு காலவிசேஷத்தில் தேவர்களால் தோல்வியுண்ட அசுரர்கள், தமது சிற்பாசாரியனாகிய மயனிடத்துச் சரண்புகுந்தனர். அப்பொழுது மயன் பிறரால் அறியமுடியாதவாறு போக்குவரவுகளையுடையனவும், எவராலும் ஊஹித்து அறிய முடியாவண்ணம் சிறந்த மேற் கவசங்களையுடையனவும் முறையே பொன், வெள்ளி, இரும்பு இவற்றால் அமைந்தனவுமான மூன்று பட்டணங்களைத் தனது மாயைத்திறமையினால் நிருமித்து, அவ்வசுரருக்கு அளித்தான். அசுரர்கள் அம்மூன்று பட்டணங்களையும் பெற்றுக்கொண்டு பிறர் அறியாவண்ணம் தாம் அப்பட்டணங்களில் புகுந்துகொண்டு, தேவர்கள்மீது தமக்குள்ள பகையைச் சிந்தித்தவர்களாய் மூவுலகங்களையும் மும்மூர்த்திகளையும் நாசஞ்செய்ய முற்பட்டனர். அதனைக்கண்ட மூவுலகத்தவரும் தேவர்களுடன் மஹேசனிடஞ்சென்று போற்றினர் அப்பொழுது மஹேசன் தேவர்களை நோக்கி "நீங்கள் சிறிதும அஞ்சவேண்டாம்." எனக்கூறி (அபய தானஞ்செய்து) வில்லில் பாணத்தைத் தொடுத்து, புரர்மூவரையும் நோக்கிவிடுத்தனர். புரம் மூன்றிலும் மறைந்திருந்த அசுரர்கள் அவ்வம்புகளால் அடியுண்டு, உயிர் துறந்தனர். மஹாயோகியாகிய மயன் உயிர்துறந்த அவ்வசுரர்களை எடுத்துவந்து, மூன்று பட்டணங்களிலும் அமைக்கப்பெற்றிருந்த அமிர்த ரசக்கிணற்றில் தள்ளினன் அவ்வசுரர்களும் சித்தாமிர்தரசம் தம்மீது பட்டவுடன் திடசரீரந்தாங்கியவர்களாய் மீண்டும் உயிர்பெற்றெழுந்தனர். அப்பொழுது அதனைக்கண்ணுற்ற திருமால் பசுவுருவம் பூண்டு, பிரமனைக் கன்றினுருவந்தாங்குமாறு கட்டளையிட்டு இருவருமாக மூன்று பட்டணங்களினுள்ளும் புகுந்து, அங்கிருந்த அமுதரசக் கிணற்றைப் பருகினர். அசுரர்களியாவரும் விஷ்ணுவினது மாயாசக்தியினால் மயங்கியவர்களாகி, அப்பசுவினையும் கன்றினையும் அப்பொழுது தடுக்கவியலாதிருந்தனர். அத்தருணம் நோக்கிய மஹாவிஷ்ணு தமது சக்திகளால் போர்க்கருவிகளாகிய் தேர், தேர்ப்பாகன், வில், அம்பு முதலியவற்றையுண்டாக்கினர். அப்பால் ஈசன் போர்புரியும் நோக்கங்

முடையோய்! உலகேச! தேவர் அசுரர் யாவரையும் காத்தற் பொருட்டு 'திருப்பாற்கடலினின்றுந் தோன்றிய' விஷமருந்தி, அன்பரால் 'திருநீலகண்டனெ'னப் புகழப்பெற்றோய்! உம்மை வணங்குகின்றேன். (18) நன்மைகட்குத் தங்குமிடமானோய்! உம்மை நமஸ்கரிக்கின்றேன். சகல ஆனந்தங்கட்கும் மேற்பட்ட பிரமானந்த வடிவனே! உம்மை வணங்குகின்றேன். ஓராயிரம் சிரமுடையோய்! உமக்கு வந்தனம். எக்காலமும சூரியனென ஒளி ரும்பெரும! உம்மைப் போற்றுகின்றேன். (19) மூவுலகங்களுக் கும் தலைமை பெற்றோய்! உம்மை முக்கரணங்களாலும் வணங்கு கின்றேன் எல்லாவுயிர்களுக்கும் இதம் (நன்மை) செய்வோய்! எனது வந்தனத்தை ஏற்றுக்கொள்ளும். தேவரீர் எல்லா உயிர் களுக்கும் உறைவிடமாகின்றீர்; எவ்வுயிர்க்கும் நீரே கதி; (20) தேவேச! உம்மைச் சரண்புகுந்தேன். என் சித்தம் சஞ்சலமுறா மல் உம்மிடத்திலேயே நிலைபெற்றுநிற்குமாறு அருள்புரியும். (21) திரிபுரஹர! மஹேச! திருநீலகண்ட! பரமபுருஷ! சம்புவே! பார்வதி பிராணநாத! என்னைக் காப்பீராக! உலக வடிவெலாமா னோய்! உமது பாதாரவிந்தங்களில் இடைபடாத அன்பினைத் தந்த ருளினாற்போதும்! எனது புத்தியை மயக்குகின்ற இந்தச் சிருஷ் டித்தொழிலை யான் வேண்டேன்! வேண்டேன்!!" எனக் கூறி னார். (23)

இரண்டாம் அத்யாயம் முற்றும்.

## மூன்றாவது அத்தியாயம்.

சூதர் கூறுதல்:—

இவ்வண்ணம் கவலையுற்ற பிரமதேவர் சிருஷ்டித்தொழிலை வெறுத்தவராகி, பிற எல்லாவற்றையும் மறந்து, சிவத்தியானம் ஒன்றிலேயே நித்தியம் மனத்தை யூன்றிவந்தார். (1)

அவ்வாறு பிரமதேவர் தியானித்துவரும்பொழுது பின் வருமாறு ஆகாயத்தில் அசரீரிவாக்கொன்று பிறந்தது. (1½)

---

கொண்டவராகி, தேரின் மீதமர்ந்து, வில்லில் அம்பைத்தொடுத்து, கடுப்பக வில் புரம் மூன்றைபும் புன்முறுவலுடன் எரித்து மூவுலகையும் காத்தனர்.

அசரீரி.

பிரம! சங்கரனாகிய யாம் நினது துதியினால் திருப்தியடைந்தேம். எமது பிரீதியின் பொருட்டு நீ தவஞ்செய்யின் சித்திபெறுவாய். (2½) காவிரியாற்றின் தென்பால் சகல சித்தர்களாலும் சேவிக்கப்பெற்ற வகுளவனம் என ஒரு பரிசுத்தமான புண்ணியஸ்தலமிருக்கின்றது. கூரியமதியுடையோய்! நீ அங்குச்சென்று தீவிரமான தவஞ்செய்யின் சித்திபெறுவை. (4)

இவ்வாறு ஆகாயத்தினின்றும் எழுந்த வாக்கைச் செவியுற்று அன்பரின் அபீஷ்டங்களையளிக்கும் சிவபெருமானைப் பக்தியோடு போற்றி, அப்பொழுதே பிரமன் வகுளவனத்திற்கு வந்து சேர்ந்தார். அவ்வகுளவனத்தின் கண் "ஆச்சா, பனை, பச்சிலை, இரசளுமிச்சை, வேங்கை, மாதுளை, புளி, புன்கு, முறளை, பலா, தென்னை, நாரத்தை, வேம்பு, நாவல் முதலிய விருக்ஷங்கள் அடர்ந்திருப்பதையும் அங்குச் சித்தர் பலர் வசித்துவருவதையுங் கண்டு சந்தோஷத்துடன் அவ்வநத்தை வணங்கித்துதித்து, காலை, நடுப்பகல், மாலை ஆகிய முக்காலமும் மகேசனை மிகுந்த பக்தியோடு பூஜித்தார். (8½)

பிரமனின் தவ வருணனம்.

அப்பால் பிரமன், தம்மைச்சூழ நான்கு பக்கங்களிலும் தீவளர்த்து, அதன் நடுவே தாம் வீற்றிருந்து சூரியனை நோக்கிய கண்களுடனும் ஈசனிடத்திற் செலுத்திய சிந்தையுடனும் வகுளவனேசனுக்கு முன்பாகத் தவஞ்செய்யத் தொடங்கினர். (9½) கண் காது முதலிய அறிபுலன்களைந்தையும் ஒடுக்கி இளம்பிறையணிந்த சிரமுடையவரும், முக்கண்பொருந்திய அழகிய முகமுடையவரும், பலவகை ஆபரணங்களால் அலங்கரிக்கப் பெற்றவரும் ஸ்ரீ உமாதேவியாருடன் இரத்தின சிங்காசனத்தில் வீற்றிருப்பவரும் சகல பிராணிவர்க்கங்களையுங் காப்பாற்றுபவருமாகிய மஹாதேவவள்ளலை ஹிருதயத்தில் தியானஞ் செய்தவண்ணமே அவ்வரணியத்துள்ள ஈசன் சந்நிதியில் வெகுகாலம் வரை அருந்தவம் புரிந்தார்.

மற்ற மனிதர்களால் செய்ய இயலாதவாறு அத்தகைய அரிய தவம் புரிந்தார் அங்குப் பிரமதேவன். (12) அவரது தவத்

தினல் யாவும் நடுங்கின; கடல்கள் கலங்கின; மக்களனைவரும் மயக்கமுற்றனர். பொறுமையிற் சிறந்த பூதேவியும் நடுக்குற்றனள். (பூகம்பமுண்டாயிற்று) (13)

இவ்வாறு மூவுலகங்களுங் கலங்கிநிற்பதைக் கண்ட இந்திரன் (அரி) முதலிய தேவர்கள பரமேசுவரன் அமர்ந்திருக்கின்ற ஸ்ரீகைலையங்கிரியை யடைந்தனர். (14) அடைந்து அங்கு வாயிற் காத்துநின்ற நந்திகேசப் பெருமானிடம் வந்த காரியத்தைத் தெரிவித்தனர் (14½) நந்தீசுவரரும, பரமேசனது சமயம் நோக்கித் தேவர்களின் வரவை விஞ்ஞாபனஞ் செய்தனர். (15½) பின்னர், ஈசன் அநுமதிப்படி தேவர்களெல்லோரையும் தேவதேவனது திருச்சந்நிதிக்கு அழைத்துச் சென்றார் அந்த நந்திதேவர். (16)

அப்பால் தேவர்களுக்கு முன்பாக ஸ்ரீ தேவேந்திரன் மாதேவனை வணங்கிக் கைகூப்பி நின்று, நித்திய சந்தோஷத்துடன் விளங்குகின்ற பரமேசனை நோக்கி "ஹேபகவன்! ஸர்வலோகேச! மாயாதீத! மஹேச! சம்புவே! பிரமனின் தேஜஸால் (தவத்தீயால்) மயங்கிக்கிடக்கின்ற இத்தேவர்களைக் காப்பாற்றுவீராக. (18) மஹேச! பிரமனின் தவத்தால் இவ்வுலகம் யாவும் வெம்மையுற்று நிற்கின்றன. (18½) பரமேச! நீரேகதி! இவர்கள் எல்லோரையும் நீரேகாப்பாற்றல் வேண்டும்." எனத் தெரிவித்த பொழுது, அன்பரிடத்து அன்புபூண்ட (பக்தவத்ஸல) உமை கொழுநன் தேவர்களைப்பார்த்து, "நான்குமுகங்களையுமுடைய பிரமதேவன் அகங்காரங்தடித்து அதனாலுண்டான பாவத்தால் தனது தூய்மையை இழந்தான். இப்பொழுது யாம் அவற்கு முன்பாகத் தோன்றி அவனது மனோபீஷ்டத்தை யளித்து, மீண்டும் சிருஷ்டித்தொழிலில் ஏவுகின்றேம்." எனக்கூறி, தேவர்களை அனுப்பி விட்டு, வகுளவநத்தை யடைந்தார். (22)

பகவான் ஸ்ரீசம்பு, வகுளாவனமடைந்து பிரமனின் முன்பாக வுள்ள வகுளவனேசராகிய இலிங்கவடிவத்தினின்றும் ஸ்ரீ கல்யாணசுந்தரீ என்னும தேவியாருடன் விரைந்து ஆவிர்ப்பவித்தார். (வெளித்தோன்றலானார்) (23½)

உலகத்தின் தந்தையாகிய பிரமதேவர் தமக்கு முன்பாக ஸ்ரீ சங்கரமஹாதேவன் பிரத்தியக்ஷமானதைக் கண்டு ஆனந்தக்

கண்ணீர் சொரிந்து, அப்பேரானந்தத்தால் சூரியனைக்கண்ட செந்தாமரை மலர்போல் விரிந்த கண்களுடன் விரைந்து (1) சாஷ்டாங்கமாகப் பன்முறை வணங்கி எழுந்து, சிரத்திற் கரங்கூப்பித்துதிக்கலானார். (25½)

பிரமன் துதித்தல்.

பார்வதியின் தலைவ! போற்றி; கருணைக்கடல் வடிவே! போற்றி; (26) மாயாசக்தியினால் மோஹம் விளைவிப்போய் போற்றி; ஞானவள்ளலே போற்றி. நிஷ்களா! போற்றி. தேவர்க்கெலாம் தலைமை பெற்றோய்! போற்றி. நித்தியனே! போற்றி. அழிவற்றோய்! போற்றி. (27) குற்றமற்றோய்! போற்றி. சாந்தனே! போற்றி, சச்சிதானந்தசொரூபனே! போற்றி. உருவனே! போற்றி. அருவனே! போற்றி. மாயையுடன் பொருந்திய சகுணனே! போற்றி. மாயையின் சம்பந்தமற்றாய்! (நிர்க்குணனே!) போற்றி. (28) சிறிய வடிவினனே! போற்றி. பேருருவம் பெற்றாய்! போற்றி. சூக்ஷ்மவடிவினனே! போற்றி. ஸ்தூலவுருவமுடையாய்! போற்றி. அணுவினும் சிறியோய் போற்றி. மலையினும் பெரியாய்! போற்றி. (29) சுயம்பிரகாசவடிவே! போற்றி. உலகத்தை விளங்கவைக்கும் ஒருமுதல் ஞாயிறே! போற்றி. சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் என்னும் முத்தொழிற்கும் முதல்வனே! போற்றி. (30) எம்மனோரை முத்தொழிலில் பிரேரணை செய்வோய்! போற்றி. வேதங்களால் தேடப்பெறும் தேவனே! போற்றி. அளவிடற்கரிய ஒளியுடையோய் போற்றி. கல்யாணசுந்தரியின் தலைவ! போற்றி. வகுளவனத்தில் வாழ்வோய்! போற்றி. (34) நித்தம் தென்கோகன்னப்பதியில் வாழும் ஈசனே! போற்றி. மாபாதகங்களாகிய பேரலைகளால் மோதப்பெற்ற பிறவிப்பெருங்கடலில் வடவைத்தீப்போல விளங்குவாய்! போற்றி. பிறவிப்பெருங்கடலைக்கடக்க அருளும் மாலுமியே! போற்றி. அறியாமையாமிருளை யறவே நீக்கும் அலர்கதிர் ஞாயிறே போற்றி. தேவர்தம் தலைவ! போற்றி. வீணே எனது கர்வததாலுண்டான பெரும் பிழைகளைத் தேவரீர் கருணையினாற்பொறுத்து, எனக்கு அருள் செய்வீராக." (34)

---

(1) சாஷ்டாங்கமாக வணங்குதல்:— இரண்டுகால், கை, முழந்தாள், மார்பு, கண்கள், சிரம் இவை பூமியில் படியும்படி செய்யப்படுகின்ற வணக்கத்திற்குச் "சாஷ்டாங்க வணக்கமெ" னப்பெயர்.

கமலத்தில் தோன்றிய பிரமன் இவ்வாறு துதி செய்ததும் பரமேசன் பிரசன்னராகிப் பெருமகிழ்ச்சியுடன் பிரமதேவரது சிரத்தில் தமது திருக்கரத்தை யமர்த்தி, தமது திருமுகமாகிய சந்திரனிடத்தினின்றும் பெருகுகின்ற அமுதத்திற்கொப்பான வாக்கை வெளியிட்டருளினர். (35)

ஈசன் திருவாக்கு.

பிரம! நீ செய்த இத்துதியினால் யாம் மகிழ்ச்சியுற்று நினக்கு வேண்டிய வரமளிக்க வந்திருக்கின்றோம். நீ விரும்பும் வரத்தைக்கேள். பயத்தை விடுத்து, யாம் இப்பொழுது கூறும் நன் மொழியைச் செவியிற் கொள். (36)

பிரமன் கூறுதல்.

சங்கர! உமது பாதாரவிந்தங்களில் எனக்கு அழியாத பக்தி மாத்திரமிருக்குமாறு அருள்புரிதல் வேண்டும். அவ்வயரிய பக்தி (1) யொன்றே எனது எல்லா விருப்பமாகும். இதிற் சிறிதும் ஐய மில்லை. இதனையன்றி மற்றொன்றினையும யான் விரும்பேன், விரும் பேன்; இஃது உண்மையாகும். (ஸத்தியவசனமாம்) (38)

சிவபெருமான் மறுமொழி கூறுதல்.

பிரம! விரும்பிய பயன்கள் எல்லாவற்றையும் தருவதாகிய பராபக்தி உனக்குச்சித்திப்பதாக! முன்போல் மூவுலகங்களையும் படைக்குந்திறனும் உனக்குத் தோன்றுவதாக! (39)

என இவ்வாறு இளம்பிறைச்சடையோன் இயம்பிய பின்னர் இலிங்கத்திலேயே மறைந்தனர். அந்த இலிங்கத்தைப் பிரமதேவர் பல் காலமும் பூஜை புரிந்தனர். அப்பால் தம்முடைய மனக்கிடக் கைகள் யாவும் அடையப்பெற்று, முன்போல் மூவுலகங்களையும் படைக்கும் முதல் தொழிலில் முனைந்தார். (40½)

இங்ஙனம் முனிவரால் இயற்றப்பெற்ற புண்ணிய கதையை முழுமனத்துடன் இவ்வுலகில் எவர் படிக்கின்றாரோ எவர் கேட் கின்றாரோ அவர் முறையே நற்புத்தியையும், திடமான சிவபக்தி

(1) கடவுளின் அருளைத்தவிர்த்து மற்றொன்றையும் மனத்தால் விரும் பாது, அவரிடத்துச்செலுத்துகின்ற அன்பிற்குப் பராபக்தி எனப்பெயராம்.

யையும் பெறுவதுடன் சகல மனோரதங்களும் சித்திக்கப்பெற்று, புண்ணியராகி வாழ்வர். (41½)

மூன்றும் அத்தியாயம் முற்றும்.

## நான்காவது அத்தியாயம்.

### ஸ்ரீதேவி, பூதேவிகளின் சாபநீக்கம்.

மீண்டும் சூதமுனிவர் கூறத்தொடங்குதல்.

முன்னர், திரேதாயுகம் நிகழுங்கால் ஸ்ரீவைகுண்டலோகத்தில் மஹாவிஷ்ணுவானவர் தம்முடைய மனைவியராகிய ஸ்ரீதேவி, பூதேவி என்னும் இருவருடன் மிக (மகிழ்ச்சியோடு) கிரீடித்து வந்தார். (1)

அவ்வாறு நிகழ்ந்து வருங்கால் ஒரு பொழுது அந்த லக்ஷ்மீ தேவிக்கும் பூதேவிக்கும் ஸ்ரீநாரணனின் முன்பாகவே கலகமுண்டாயிற்று. (1½) அப்பொழுது பெண்டிர்களுக்குள் சக்களத்திப் போராட்டமுண்டாவது போல் அவ்விருவர்க்குள்ளும் குரோதத்தால் நிகழ்ந்த சண்டையைக் கண்ணுற்ற பகவான் ஸ்ரீமகாவிஷ்ணு கோபமுற்றவராய் அவர்களிருவரையும் நோக்கி, "மானிடமாதர்க்கு எவ்வாறு ரோஷமுண்டாகுமோ அவ்வாறு உங்களிருவருக்கும் ரோஷமுண்டாக அதனால் எம் முன்பாகவே நீங்கள் கலஹஞ் செய்தீர்கள். பூவுலகில் பிறந்து பிறந்து இறக்குந்தன்மையுடைய மனிதர்களிடையே மிகுதியாகச் சக்களத்திப் போராட்டம் நிகழ்வதைக் கண்டுள்ளோம்; அத்தகைய செயல் இப்பொழுது உங்களுக்குள் நிகழ்ந்தமையின் நீங்களிருவரும் பூவுலகஞ்சென்று மானிடஸ்திரீகளாகப் பிறத்தல் வேண்டும்" என்று கூறினர். (4½)

கோபத்தினல் இவ்வாறு கோவிந்தன் கூறியவுடன் பூதேவி லக்ஷ்மீதேவியரிருவரும் மிக்கவணக்கமுற்றவராய், தம் கணவராகிய அத்திருமாலைப் பத்தியுடன் வணங்கிக் குவிந்த கரங்களுடன் பன்முறை துதித்து, பின்வருமாறு கூறினர்:— (6)

"எங்கும் நிறைந்த ஈச! ஈங்கள் செய்த குற்றத்தைத்தாம் கருணையினுற் பொருத்தருளும். உலகத்தின் தலைவராகிய தேவரீர் மகிழுங்கால் எல்லாவுயிர்களும் மகிழ்ச்சியுறுகின்றன. (7)

தாம் மகிழ்ச்சி நீங்கியிருக்குங்கால் உயிர்கள் யாவும் அழிவுறுகின்றன. இதில் சிறிதும் ஐயமில்லை. அன்றியும் தேவர்தம் தலைவ! எமக்குக்கணவராகிய தேவரீரன்ருே கடவுளாவீர்" (8)

இங்ஙனம் திருமாலை நோக்கித்திருமகளும் பூமகளும் புகன்று, அவரை மகிழ்ச்சியுறச்செய்து, இருவரும் பன்முறை விரைந்து வணங்கினர். (8½) அண்டினேர்குறையையகற்றும் ஹரிபகவான் அப்பொழுது ஸந்தோஷமுற்றவராய், தம் தேவியரை நோக்கி "நாம்கூறிய வாக்கு வீண்போகாது; அதுஸத்தியமாகப் பலித்தே தீரும்; ஆதலால், நீங்களிருவரும் எமது ஆணையை மேற்கொண்டு, புவியிற்சென்று பார்வதிகேள்வனைப் பூஜித்துமீண்டும் எம்மையே வந்து அடைவீர்களாக" எனவாக்களித்தார். (10½)

திருமால்தெரிவித்த செய்தியைக்கேட்டு, தேவியரிருவரும் தரணியையடைந்து அழிவற்ற விஷ்ணுவை அன்போடு வணங்கி, அப்பால் பூசண்டகிரிஎன்னும் பேரையூருக்கு வடகீழ்பால் ஐந்து (1)குரோசதூரத்திலுள்ள ஸ்ரீதக்ஷிண கோகர்ணத்தை யடைந்து, அங்குச்சகல உயிர்களுக்கும் சாக்ஷியாய், உலகத்தின் நாயகனுய் விளங்காநின்ற, பரமேசுரன் சாந்நித்தியஞ்செய்கின்ருரென அறிந்து, அத்தலத்தில் சர்வஜீவர்களுக்கும நன்மை செய்வதில் விருப்பங்கொண்டவரும், முக்காலமுமுணர்ந்தவருமாகிய கபிலமுனிவர் வசிப்பதையுமுணர்ந்து, அவரைத்தரிசித்துத் தமது வரலாற்றைத் தெரிவித்தனர். (13½)

## கபிலமுனிவரிடம் தேவியர் வேண்டல்.

"தவத்தைச் செல்வமாகவுடைய முனிவரிற் சிறந்தோய்! தர்மங்களினுட்பம் ஆய்ந்தபெரிய! சர்வவல்லமையுடைய ஸ்ரீமஹாவிஷ்ணுவினது சாபத்தால் நாங்களிருவரும் இப்பூலோகத்தை யடைந்தோம். ஆதலின் எந்த உபாயத்திஞலேனும் எங்களிருவருக்கும் அத்திருமாலின் திருத்தொண்டுமீண்டும் கிடைக்குமாறு

---

(1) 4000 கைமுழங்கொண்டது ஓர் குரோசமாம்.

(ஒருவழி) கூறவேண்டும். சிறந்தநோன்புடையோய்! எங்களிருவர்க்கும் எக்காலமும் மனமகிழ்ச்சியளிப்பது அத்திருமாலின் திருத்தொண்டேயாகும்.” (15½)

புத்திமானும், முனிவரிற்சிறந்தவருமாகிய கபிலர் அவ்வசனத்தைக்கேட்டு “அரிபிரமேந்திராதியர் எல்லோரும் சிவபூஜை செய்து அதன் மகிமையினாலேயே உலகத்தைச்சிருஷ்டிக்கும் வல்லமையையும் அதனைப் பரிபாலிக்கும் பதவியையும் பெற்றனர். ஆதலின் நீங்களிருவரும் இங்கு ஸ்ரீமஹாதேவனை மனமகிழ்ச்சியுடன் பூஜித்தால் அவரது அநுக்கிரகம் பெற்று விரைவில் வைகுண்டஞ்சேர்வீர். இது நிச்சயம்” எனக்கூறினர்.

முனிவர் உபதேசித்தவாறே அவ்விருவரும் பக்தியுடன் அங்குப்பரமேசனைப் பூஜித்து மீண்டும் பத்மநாபனை யடைந்தனர். (19)

## சௌனகர் முதலிய முனிவர் கூறல்.

சாஸ்திரங்களெல்லாவற்றையுமுணர்ந்த சூதமுனிவ! பகவான் பார்வதிநாயகன் எங்குப்பிரத்தியக்ஷமானார்? சாபத்தால் மானிடவுலகத்தையடைந்த தேவியரிருவரும் மீண்டும் எவ்வாறு ஸ்ரீமஹாவிஷ்ணுவையடைந்தனர்? மிகுந்த மதிநுட்ப முடையவரும் வியாசரின் மாணாக்கருமாகிய தாம் இதனை விஸ்தாரமாகக் கூறவேண்டும் (20½)

தர்மங்களையுணர்ந்தவர்களும் தர்மத்தினிடத்து அன்பு பூண்டவர்களுமாகிய முனிவரர்களால் இவ்வாறு வினவப்பெற்ற சூதமுனிவர், எல்லோருக்கும் நன்மையுண்டாகும் பொருட்டு அந்தப் புண்யகதையை மீண்டும் தொடங்கலானார். (21½)

## சூதர் கூறல்.

அந்த மகிழவனத்தில் முன்னர், கபிலமுனிவரால் பூஜிக்கப்பெற்ற உத்தமலிங்கமொன்றிருக்கின்றது. ஸ்ரீலக்ஷ்மீதேவி அந்த இலிங்கத்தில் ஸ்ரீசிவபெருமானைப் பன்னிரண்டுவருஷம் பூஜித்தனள். (22½)

அதற்குத் தென்பக்கத்தில் சந்திரனால் பூஜிக்கப்பெற்ற சந்திரேசன் என்னும் சிவலிங்கத்தினை ஸ்ரீபூதேவி பூஜித்தனள். (25)

அந்த ஈசனுக்குமுன்பாக வடபக்கத்தில் பரிசுத்தமான நீரினையுடையதும், மிகுபுராதனமுமான சந்திரதீர்த்தமிருக்கின்றது. அந்தணரிற்சிறந்தோர்களே! அதில் முறைப்படி ஆடுகின்ற மனிதர்களுக்கு எல்லாப்புருஷார்த்தங்களும் எளிதில் சித்திக்கின்றன. (24)

ஸ்ரீபூதேவி அந்தச் சந்திரதீர்த்தத்தில் மூன்று காலங்களிலும் ஸ்நானஞ்செய்து பக்தர்களிடத்து மிகுந்த அன்புடைய ஸ்ரீஈசானதேவனை விதிமுறைப்படி பூஜித்தனள் பன்னிரண்டாவது வருஷம் நிறையுங்கால் அழிவற்றவராகிய பார்வதீசன், ஸ்ரீபூதேவிக்குப் பிரியமளிக்கவேண்டுமெனும் விருப்பத்தால் விருஷபவாஹனத்தின் மீதமர்ந்து பிரத்தியக்ஷமானர். (26½)

ஸ்ரீபரமேசுவரன் கூறுதல்.

"பூதேவி! சங்கரனுகிய யாம் உனது பூஜையினுல் மகிழ்ச்சியுற்று, உனக்கு வரமளிக்கவேண்டியே இங்கு வந்திருக்கின்றோம். உனக்கு விருப்பமான வரத்தைக்கேள். இளையோய்! கல்யாணி! உனது விருப்பத்தின் வண்ணம் தருகின்றோம், கூறுவையாக." ( 8)

உலகத்தைத்தாங்கி நிற்கும் பூதேவி, அங்குப் பிரத்தியக்ஷமாகி நிற்கும் ஈசன் இவ்வாறு புகன்றதைக்கேட்டு, அததேவதேவனை நமஸ்கரித்துக் குவிந்தகைகளுடன் அவரை நோக்கி மறுமொழி கூறத்தொடங்கினுள். (29)

(1) "சாம்ப! சதாசிவ! முனிவுகொண்ட ஸ்ரீமஹாவிஷ்ணுவினுல் யான் சபிக்கப்பெற்றேன். ஈச! உமது அநுக்கிரகத்தினுல் நான் மீண்டும் ஸ்ரீவிஷ்ணுவினது அனுக்கிரகம் பெறுதற்கு உரியவளாகவேண்டும்." (30)

பூதேவியினது இவ்வேண்டுகோளைச் செவியுற்ற பார்வதிநாதன், மிகுந்த பிரீதியுற்று, கிருபையினுல் மனம் கரைந்தவராகிக் கூறலானர். (31)

அழகிய வதநமுடையாய்! மங்கள வடிவமுடையாய்! இங்கு நீ சிறிதுகாலம் வசித்துக்கொண்டு பூஜை செய். அவ்வாறு செய்து

(1) தாம் "அம்பாளுடனிருப்பதுபோல் யானும் எனது கணவனுடனிருக்குமாறு அருள்செய்க" என்ற கருத்துத்தோன்ற 'அம்பாளுடன் விளங்குவோய்' (ஸாம்ப) என விளித்தாள்.

வருவையாயின் ஸ்ரீமஹாவிஷ்ணுவையழைத்து, உனக்கு இவ்விடத்திலேயே பாணிக்கிரகணமும் () விதிமுறைப்படி விவாஹமும் செய்துவைக்கின்றோம். (32)

பூதேவி! நீமிகுந்த கவலையுற்றவளாகிக் காணப்படுகின்றாய். உனது அபீஷ்டத்தைப் பூர்த்திசெய்கின்றோம். (33)

இவ்வாறு பூதேவிக்கு அபயதானஞ் செய்து ஈசன் அவ்விடத்திலேயே மறைந்தனர். (33½)

இத்தருணத்தில் ஸ்ரீலக்ஷ்மீதேவியானவள் மங்களதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து, வெண்மையான வஸ்திரமுடுத்து, பக்தியுடன் ஈசனை அருச்சித்துப் பேரன்புடன் அப்பரமேசனைப்புகழ்ந்தனள். (35)

அப்பொழுது ஸ்ரீசங்கரன் ஸ்ரீபார்வதிதேவியாருடன் அங்கு இலிங்கவடிவத்தில் எழுந்தருளினர். (35½) அங்கங்கள் மெலிந்து எளிமை தோன்றிய முகத்தோடு, பிராணநாதனைக் காணவேண்டுமெனும் விருப்பத்தோடு, சிவபூஜையில் பெரு மகிழ்ச்சியோடு நிற்கின்ற ஸ்ரீ லக்ஷ்மீதேவியைக் கண்ணுற்று உலகத்திற்கெலாம் நன்மையளிக்கும் சங்கரன், மிகுந்த பிரீதியுற்றவராய் தமது இனிய வாக்கால் வருமாறு கூறத்தொடங்கினர். (37)

பயமுற்று நிற்கும் தேவி! ஸ்ரீ மகாவிஷ்ணுவினது சந்நிதியை விட்டுப்பிரிந்து ஏன் இவ்வாறு வருந்தித் தவம்புரிகின்றாய்? உனக்கு மங்களமுண்டாகுக. உனக்கு வரமளிக்க விரும்பி இங்கு வந்திருக்கின்றோம். வேண்டிய வரத்தைப் பெற்றுக்கொள். (38)

ஸ்ரீ லக்ஷ்மீதேவி மஹேசனது வசனத்தைக் கேட்டு மிகுந்த மகிழ்ச்சிகொண்டவளாய், தனது கண்களைத்திறந்து ஈசனைக்கண்டு வணங்கி, பக்தி மிகுதியினால் எங்கும் நிறைந்து எல்லோரையும் காத்தலையே தொழிலாகக்கொண்டுள்ள சுகந்தருமீசனைத் துதிக்கலானாள். (39½)

நான்காம் அத்யாயம் முற்றும்.

## ஐந்தாம் அத்தியாயம்.

### லக்ஷ்மீதேவி துதித்தல்.

உலகெலாம் போற்றும் ஒரு முதற்கடவுளே! போற்றி; போற்றி. வெள்ளியங்கிரியில் வாழும் ஈசனே! போற்றி; போற்றி. நாரதரால் பூஜிக்கப்பெற்ற பாதாம்புயங்களை யுடையாய் போற்றி. அன்பருக்குவரந்தருவோய்! போற்றி. (வள்ளலே! போற்றி) (1)சர்வேச! சராசரவடிவமாய் விரிந்துதோன்றும் இவ்வுலகத்தைப் படைப்பவரும் நீரே. இதனைக்காப்பவரும் நீரே. கற்பமுடிவில் உருத்திரவடிவங்கொண்டு இந்த உயிர்களியாவற்றையும் சங்காரம் செய்பவரும் நீரே. (2) எளியோர்களின் உறவினரே உம் திருவடியே சதாகாலமும் சரணென் அடைந்துள்ள அடியாளைக் காப்பது உம் கடன். இவ்வண்ணம் இலக்ஷ்மிதேவியினால் இறைஞ்சப்பெற்றவரும், அண்டினோரது பாவத்தைத் தீர்ப்பவரும் பரமேசனுமாகிய மஹாதேவன் மனத்தால் மகாவிஷ்ணுவை நினைக்க, அப்பொழுதே அங்குத் திருமாலும் "விரைந்துசெல்லும் தமது கருட" வாகனத்தின்மீது ஏறி வகுளவநத்துள்ள ஈசன் முன்பாக வந்து சேர்ந்தார். (4)

யாவற்றையும் இரக்ஷிக்கின்ற மகாதேவவள்ளலை வந்தனம் புரிந்து, இருகரங்குவித்து அவர் முன்பாக நின்றார் கமலையின் கணவன் பிறவிப்பாசத்தை விடுவிப்பவரும், நன்மைகட்கெல்லாம் உறைவிடமுமாகிய ஈசன் பக்தியோடு தம் பக்கத்தையடைந்துள்ள பத்மநாபனை நோக்கிப் பேசத்தொடங்கினார். (6½)

### ஈசன் கூறுதல்.

விஷ்ணுவே! ஸ்ரீலக்ஷ்மீதேவி, உமது அனுக்கிரகத்தைப்பெறவேண்டி, தனது சரீரத்தை மிக வாட்டிக்கொண்டு இலிங்க வடிவமுமான எமது உருவத்தைப் பூஜிக்கின்றாள். அவளது அபீஷ்டத்தை யளிக்கும் பொருட்டு இங்கு நாம் தோன்றலாயினேம். (8) ஸ்ரீபூதேவியும் இதன் தென்பக்கத்தில் எனது இலிங்க வடிவத்தின் வலது பாரிசத்தில் மிகப்பிரயாசமுற்று, உம்மையடைய வேண்டுமெனும் ஆவலால் இடையறாத அன்போடு சதாகாலமும்

பூஜித்துவருகின்றாள் (9) மேதையிற்சிறந்தோய்! ஸ்ரீ லக்ஷ்மீ தேவி பூதேவி இருவரையும் நீர் இங்குப் பாணிக்கிரகணஞ் செய்துகொள்ளவேண்டும். (உமது கையினால் அவர்களது கரங்களைப் பற்றி விவாஹமுறையாக அங்கீகரித்தல் வேண்டும்.) ($9\frac{1}{2}$)

மது என்னும் அரக்கனைவென்ற மகாவிஷ்ணு மகேசனது மதுரமொழியைச் செவியுற்று, மகிழ்ச்சிமிகக்கொண்டவராய் மறுமொழிகூறலானார். (10)

சகலவுலகங்களையும் அடக்கியாளும் ஈச! ஷாட்குண்ய பரிபூரண! (பகவன்!) எங்கும் நிறைந்தோய்! இணையற்றோய்! நான் கோபமிகுதியினால் முன்னர் அறியாது, மதிமயங்கி இவ்விருவருக்கும் சாபமளித்தேன். மஹேச! உமது கிருபையினால் இப்பொழுது யான் விரும்பிய காரியம் கைகூடப்பெற்றேன். இப்பொழுது தமக்கு எது உசிதமாகத் தோன்றுகிறதோ அதனைத் தாம் செய்வீராக. (12)

உலகத்திற்கு நன்மை செய்வதிலேயே விருப்பங்கொண்ட பசுபதி மிகமகிழ்ச்சியுடன் மகாவிஷ்ணுவினால் இங்ஙனம் பிரார்த்திக்கப் பெற்றவுடன் தெய்வ உலகச்சிற்பிகளில் முதன்மை பெற்றவனாகிய விசுவகர்மனைச் சிந்திக்கலானார். (3) சிவ ஆக்கினையின் வண்ணம் விசுவகர்மனும விரைந்து வந்து சேர்ந்தான். ($13\frac{1}{2}$) ஈசனையும் மகேசுவரியையும் வணங்கினான். தம் முன்னர் வணங்கிநின்ற விசுவகர்மனை நோக்கி, மகேசன் பேசலுற்றார். ($14\frac{1}{2}$)

"ஓ விசுவகர்ம! விஷ்ணுவினது விவாஹத்திற்குரியவாறு சிறந்ததோர் கலியாணமண்டபம் விரைவில் முடிதல் வேண்டும். அது பற்பலகம்பங்கள் அமைந்ததாய் குறுக்குக் கட்டைகளிட்டு தோரணங்கள் தொங்கவிடப் பெற்றதாய் இரத்தினங்கள் இழைக்கப்பெற்ற உப்பரிகைகள் நெருங்கப்பெற்றதாய் (அர(ண்)மனைபோலும்)நிரூபிக்கப் பெறவேண்டும். அது கிணறு, நடைகிணறு, குளம் இவையமைந்து சிங்காரமாயிருத்தல்வேண்டும். எனது ஆக்கினையின் வண்ணம் யாவும் விரைவில் செய்து முடிக்க.! ($16\frac{1}{2}$)

அவ்வாறே ஈசனது ஆணையைக்கேட்டு அநேக வீதிகளுடனும், தங்கமதிற்சுவருடனும், பற்பல கடைகளுடனும் உயரிய

நகரமொன்றை நிருமித்தான் விசுவகர்மன். (18) அப்பால் ஈசன் ஆக்கினைப்படி இந்திரன் முதலிய தேவர்களும், கந்தர்வர்களும், அப்ஸரஸ் (தேவமாதர்) களும், பிரமதேவனும் வசிஷ்டர்முதலிய பிரமரிஷிகளும் நாரதர்முதலிய தேவரிஷிகளும் திருமாலின் திருமணமண்டபத்தில் வந்து நிறைந்தனர். (20)

மகேசன் அனுமதிபெற்றுப் பிரமாவும் விதிமுறைப்படி அக்னிவளர்த்து நெற்பொரியினால் ஓமஞ்செய்தல் முதலிய விவாஹச் சடங்குகளை நிறைவேற்றித் திருமாலின் கரத்தால் திருமகள் தரைமகள் இருவரது கரங்களையும் ஏற்கச்செய்தனர். (21) திருமாலும் அவ்விருமாதருடனும், மிகுந்த பக்தி பூண்டு பார்வதிநாதனை வணங்கி நின்றார். (22½) வணங்கிநின்ற திருமகள் நாதனை நோக்கி, உமாநாதனாகிய விசுவேசன் திருமகளின் துணைவனாகிய திருமாலே! இன்று முதல் நீர் "கல்யாணன்" என்ற பெயர் புனைந்து எல்லோருக்கும் அவரவர் விரும்பிய பயனையளித்துக்கொண்டு இந்தக் கல்யாணமண்டபத்தில் வசித்துவருவீராக. (23½) "விஷ்ணுவே! இந்தக் கல்யாணபுரத்தில் எந்த உத்தம பக்தர்கள் கல்யாணன் எனப் பெயர்தாங்கிய உம்மை அருச்சிக்கின்றார்களோ அவர்கள் துன்பத்தினின்றும் விடுதலைபெறுவார்கள். இதிற் சிறிதும் ஐயமில்லை. (24½) யாமும் உமக்குத் தென்பக்கத்தில் ஸ்ரீ பூதேவியினால் பூஜிக்கப்பெற்ற காரணங்கொண்டு 'ஸ்ரீ பூமீசுவரன்" என்னும் பெயர் தாங்கி உப்பக்கலிலேயே வசிக்கின்றோம் (25½) பூமீசுவரன் என்னும் பெயர்பொருந்திய இலிங்க வடிவத்தில் எம்மை எவர்கள் பூஜிக்கின்றனரோ அவர்கள் பிள்ளை, பேரன் முதலிய பேற்றைப் பெற்று, தர்மம் செல்வம் இன்பம் இவற்றை விரும்பியவாறு அனுபவித்து, பின்னர் எமது உலகத்தையும் அடைவர்." எனத் திருவாய் மலர்ந்தருளியவண்ணமே அங்கு மறைந்தனர். அக்காலம் முதல் அந்தப் பூமீசனை வணங்குவோர் அத்தகைய நன்மைகளைப்பெற்று வாழ்கின்றனர். (28½)

ஐந்தாம் அத்தியாயம் முற்றும்.

# ஆரும் அத்தியாயம்.

## முனிவர்கள் கூறுதல்.

“ சூதமுனிவ! தத்துவப்பொருளையுணர்ந்த நல்லோய்! இன்னும் பசுவினுக்குக் கருணைசெய்த பரமன் பெருமையைப் பகர்வீராக.” (1)

எனப் புராணங்கூறும் சூதமுனிவரை நோக்கி முனிவர்கள் வேண்டலும் அவ்வசனத்தைச் செவியுற்ற சூதமுனிவர் சொல்லலுற்றார். (1½)

முனிவர்களே! பாவத்தைப்போக்கும் பாவனக் கதையைக் கேளுங்கள். ஒரு முறை செவியுறுதலாலேயே கேட்போர் பாவத்தைக் கவரும் ஸ்தலமகிமையைக் கேளுங்கள். (2½)

துவாபரயுகத்தில் காமதேனுவின் குலத்திற் பிறந்த கபிலை, இப்பூலோகத்தையடைந்து புவியெங்கும் சஞ்சரித்தது. (3½)

அங்ஙனம் சஞ்சரித்து வருங்கால் நதிகளிற் சிறந்த காவிரியாற்றைக்கண்டு அதில் மிகப் பிரீதியுடன் சிநானஞ்செய்து அரங்கநாதனையும், பின்னர் அரங்கநாயகியையும் அருச்சித்து, அப்பால் திருவானைக்காவையடைந்து நாவலம்பதியை நன்கு வணங்கி, பின்னர்க் காவிரியாற்றின் தென்கரைவந்து, அங்கு அமர்ந்துள்ள தாயுமானுரையும் உச்சிப்பிள்ளையாரையும் உவப்புடன் தரிசித்து, வணங்கி, தென் திசை நோக்கிச்சென்றது. (7)

செல்லுங்கால் வழிநடுவில்(1)குடுமிமாமலையைக்கண்டு அங்கு வீற்றிருக்கு மீசனைப்பூசித்து, பின்னர் அத்தலத்தின் தென்கிழக்

---

(1) இத்தலத்தில் ஈசனுக்கு அணிந்திருந்த மலர்மாலையை அங்குத் தொண்டுபுரியும் ஓர் பணியாளன் கவர்ந்து, அதனைத் துர்விநியோகஞ் செய்ய, அப்பொழுது அரசன் அங்குத்தோன்றவும், அதனையுணர்ந்த பணியாளன் தான் துர்விநியோகஞ் செய்த மலர்மாலையை மீண்டும் கொணர்ந்து ஈசன் சிரத்திற் சூட்டி அரசன் முன்பாக ஈசனுக்குக் கற்பூரங்காட்டி அம்மலர்மாலையையே எடுத்துப் பிரசாதமென அளிக்க, அதில் ஒரு நீண்டரோமமிருக்கக்கண்ட அரசன் இஃதேது விந்தையாயிருக்கின்றது? ஈசனுக்கும் திருமுடியில் உரோமம் முளைத்துளதோ?” எனக்கேட்க, பணியாளன் பிரபுவைப்பார்த்து, ஈசன் சிரத்தில் உரோமமுள்ளது எனப்பணிவுடன் கூற,

4

திலுள்ள பேரையூரினையடைந்து, ஆங்குள்ள நாகேசனைப் பக்தியுடன் பூஜித்து, அப்பால் பரிசுத்தந்தருவதாகிய வெள்ளாற்றின் மனோகரமான கரையை யடைந்து, அதில் மஞ்சனமாடி, மகிழ்ச்சி நிறைந்த மனத்தோடும் தனது கன்றுடனும் கல்யாணபுரத்தை யடைந்து, கல்யாணபுர நாதரும், வேண்டிய வரங்களைத் தந்தருள் பவருமாகிய ஸ்ரீ மகாவிஷ்ணுவை நமஸ்கரித்து, வகுளவநத்தில் வாழும் மகேசனை வந்தனம் புரியவேண்டி வகுளவநத்தை வந்தடைந்தது. (11)

அங்கு வசித்துவந்த கபிலர் என்னும் பரிசுத்த முனிவரை நமஸ்கரித்து ஈசனைப் பூசிக்கும் முறையை இயம்புமாறு வேண்டிற்று. (12)

கபிலையின் வேண்டுகோள்.

“சிறந்த தர்மங்களையுணர்ந்த முனிவ! சகல சாஸ்திரங்களையுமுணர்ந்த பெரியோய்! ஈசன் திருவருளை யான் பெறும் வழியைத் தெரிவித்தல் வேண்டும்.” (13)

நன்கு பேசுந்திறமையுடையவரும் தர்மசுவபாவம் நிறைந்தவருமாகிய கபிலமுனிவர் கபிலையின் பிரார்த்தனையைக்கேட்டு, சகல தர்மங்களின் ஸாரமெனத்தகும் அரிய வசனத்தை இயம்பலுற்றார். (14)

இங்கு முற்காலத்தில் ஈசனைப்பூஜித்து ஸ்ரீ லக்ஷ்மீதேவி விஷ்ணுவை யடைந்தனள். (14½) யானும் சிவபூஜையில் விருப்பங்கொண்டு இவ்விடத்திலேயே வசித்துவருகின்றேன். (15)

இவ்வீசனை ஆராதிப்பதனாலுண்டாகும் பெருமையை யான் கூறவும் அசக்தன் (திறனற்றவன்). இந்த க்ஷேத்திரத்தின் கண்

---

அரசன் காலையில் அதனைக்காண்போம் எனக் கூறிச்செல்ல, அப்பணியாளன் அன்றிரவு முழுவதும் விழித்து அன்பரை ஆபத்தினின்றுங்காக்கும் வள்ளலை வற்புறுத்திப் பலபல வேண்டி அன்று பொழுது விடியுமுன் ஈசன் சிரத்தில் உரோமம் முளைத்தல் வேண்டுமெனப் பிரார்த்திக்க, அவ்வாறே அரசன் வந்து மறுநாட் காலை சோதிப்பிக்கும் போது மயிர்க்கால்களிற் கைபட்டு ஒரு ரோமகூபத்தினின்றும் இரத்தந்தோன்றி அரசன்மீது தெறிக்க, அதனைக்கண்ட அரசனும், பணியாளனும் உலகமும் வியப்புற்று ஈசனைப்பலவாறுபோற்றினர்.” என்பது அத்தலபுராணத்துள்ள சரிதமாம். இக்காரணத்தினாலேயே அங்குள்ள மலைக்கும் குடுமிமாமலை எனக் காரணப்பெயர் வழங்கலாயிற்று என்பர் பெரியோர்.

ஈசனைப் பூசித்தே ஸ்ரீபிரம்மதேவனும் சிருஷ்டித்தொழிலின் மேலான திறமையையடைந்தனர். (16) மற்றும் எவ்வெவர்களால் இங்கு ஈசன் பூஜிக்கப்பெற்றனரோ அவ்வவர்கள் யாவரும் தம்முடைய மனோரதங்கள் எல்லாம் ஈடேறப்பெற்றனர். நீயும் இங்கு ஈசனைப் பூசைசெய்வையாயின் ஈசன் உனது விருப்பத்தைப்பூர்த்தி செய்வார். (17)

இவ்விதம் கபிலமுனிவரால் போதிக்கப்பெற்ற கபிலை நியமப்படி தேவனைப் பூஜித்தது. (18)

கபிலையின் கங்காயாத்திரையும், அதன் பூஜை முறையும்.

"யான் தினந்தோறும் கங்கையினின்று தீர்த்தங்கொணர்ந்து ஈசனுக்கு அபிஷேகம் புரிந்து பூஜித்துவருவேன். இது எனது திடமான விரதமாகும்." (19) எனக்கபிலை தன் மனத்தில் உறுதிகொண்டு, பால்பருகும் பருவத்திலுள்ள தனது புனிற்றிளங்கனறையுலகேசன் சந்நிதியில் விட்டுவைத்துத் தான் தினந்தோறும் கங்கை யாத்திரை தொடங்கும். (20)

அந்தக் காமதேநு வெகுதூரமுள்ள வழியை விரைவில் கடந்து, கங்கையை அடைந்து, (ஜந்ஹு) முனிவரால் மீண்டும் அருளப்பெற்ற கங்கா தீர்த்தத்தை எடுத்துக்கொண்டு மாலைக்குள் மகிழுவனத்திற்கு வந்துசேர்ந்து வகுளேசனை வணங்கி, கங்கை நீரினால் ஆட்டி தினந்தவறாது பூஜித்துவரும்.

இவ்வாறு அழிவற்றவரும் பார்வதியின் பிராணநாதருமாகிய ஈசனை, காமதேநு தினந்தோறுங் கங்கைநீர் கொணர்ந்து அபிஷேகம்செய்து, சுகந்தமிட்டு, மலராலருச்சித்து, இனிய (பல) நைவேத்தியங்கள்செய்து (தூபதீப) கற்பூரங்கள் வழங்கி, பூஜைமுடிவில் பார்வதீசனைப் பணிந்து, துதிக்கும். (24)

கபிலைசெய்த துதி.

"பிரணவ ஸ்வரூபியே! உம்மை வணங்குகின்றேன். தேவரீரை வணங்குவோரின் துன்பத்தை நீக்கும் தகைமையுடையோய்! உம்மை நமஸ்கரிக்கின்றேன். தீமையை நீக்கும் சிவபெருமானே! உம்மைத் திரிகரணங்களாலும் வணங்குகின்றேன். நன்மைதரும் பிரபுவே! நல்லோர் நாடிய வரந்தரும் செல்வ! காமனைக் காய்ந்தோய்! முப்புரமெரித்த முதல்வ! கலியின் குற்றங்களைக்களைவோய்!

சூரியன் சந்திரன் அக்கினி என்னும் முச்சுடரையும் அழகிய கண்களெனக்கொண்டோய்! இளம்பிறைச்சடையோய்! பாவங்களை நீக்கும் பராபரனே! (1) தக்கன் யாகத்தைச் சிதைத்தோய்! சுகமொன்றனையே தரும்செல்வ! அழியாத இன்பம் அடைதற்கு முக்கிய காரணமாக விளங்குவோய்! சங்கர! சம்புவே! சர்வஞ்ஞ! (யாவுமுணர்ந்தோய்!) சூலபாணி! அன்று யமனைக் கடிந்தோய்! (2) ஆலகால விஷமகற்றினோய்! எக்காலும் நல்லோர் தம் பகைவரையழிப்போய்! தேவர்க்கெலாம் தேவனெனப் புகழ்பெற்றோய்! எனதிறைவ! உலகத்தின் மூலகாரணப்பொருளே! உம்மை வணங்குகின்றேன். (28) பலவுருவங்கொண்ட கண்களையுடையோய்! பார்வதியின் பிராண நாயக! என்னைக் காத்தருள்வீராக!

இவ்வாறு காமதேநுவினால் பூஜைமுடிவில் போற்றித் துதிக்கப்பெற்று உவந்த ஈசன் ஒரு நாளைப் பூசையினாலேயே உள்ளங் குளிர்ந்தாரெனினும், சிறிதுகாலஞ் செல்கவெனத் திருவுளங்கொண்டார். ஈசன் திருவுளம் இவ்வாறாக, கபிலை, சிலநாளிவ்வாறே பூஜித்துவந்தது. (31)

ஆறாம் அத்தியாயம் முற்றும்.

---

(1) தக்கன்:— இவன் ஈசனை யவமதித்துப் பிற தேவர்களையழைத்து வேள்விபுரிந்து, அதனில் பசுபதியாகிய சிவபெருமானுக்கு அளிக்கவேண்டிய அவியை (ஹவிர்ப்பாகத்தை) அளியாது வேள்வியைமுடிக்க முயன்றான். அதனையுணர்ந்த எல்லாம் வல்ல சிவபெருமான் அங்குத் தமது அம்சம்பெற்ற வீரபத்திர உருத்திரரை ஏவி, தக்கனுக்குப்பயந்து அங்கு வந்திருந்த பிறதேவர்களுக்கும் முனிவருக்கும் புத்திபுகட்டி, மறையின் விதிக்கு முரணாகத்தக்கன் புரிந்த யாகத்தை யழித்தருளினர் என்பது கந்தபுராணக்கதையாம்.

(2) ஆலகாலவிஷம்:— இஃது, தேவர் அசுரர் அனைவரும் ஒருங்கேகூடி, திருப்பாற்கடலைக்கடையுங்கால் அதனின்று முண்டானதாம். இந்த விஷப்புகையைக்கண்டதேவர் அசுரர் யாவரும் நடுங்கி, செய்யும் வகையறியாது சிவபெருமானிடஞ்சென்று சரண்புகவே, கருணைநிறைந்த ஈசன் அதனை அமுதம்போலக்கருதி அக்கணமே தம் காத்திலேந்தி உட்கொள்ள, ஈசனது செயலையறிந்த, உலகினை ஈன்ற அன்னையாம் ஸ்ரீபார்வதிதேவியார் இஃது எம்பெருமான் திருவயிற்றிற் செல்லின் ஆங்குள உலகனைத்தும் அழியுமே, எனப்பெருங்கவலைகொண்டு, ஈசன் கழுத்தைத்தமது திருக்கரத்தால் பற்றினள். அதன் கருத்தை யுணர்ந்த கருணைக்கடல் 'அவ்விஷத்தினைத் தம் கழுத்திலேயே தங்குமாறு' செய்தனர். அக்காலம்முதல் ஈசனைத்திருநீலகண்டன் என்னும் பெயரால் பெரியோர் போற்றுவாராயினர்.

# ஏழாம் அத்தியாயம்.

## சூதர் தொடர்ந்து கூறல்.

### புலியின் தோற்றம்.

முன்னர் ஒரு காலவிசேஷத்தில் வைகாசிமாதப் பௌர்ணமியன்று பருவகாலப்பூக்கள் யாவும் பூத்து மனோகரமாயிலங்குங்கால் கபிலை, காலையில் எழுந்து கங்கை நீர் கொணரவேண்டி விரைந்து சென்றது. (1½)

வழிநடுவில் காவிரி, காஞ்சி, ஸ்ரீசைலம், (ஸ்ரீகிரி) இவற்றைக் கடந்து கோதாவரியின் வழியாகக் கங்கையை யடைந்தது. (2½) அடைதலும் அதன் பரிசுத்தஜலத்தில் ஸ்நாநஞ்செய்து விசுவேசனென்கிய சிவபெருமானை வணங்கி, அத்தேவநதியின் நீரையும் எடுத்துக்கொண்டு எளிதில் செல்லுந்திறனுடைய காமதேநு, தனது கன்றுக்குப் பாலளித்துப் போஷிக்கவேண்டுமெனும் விருப்பத்தோடு விரைந்து வந்தது. (4)

அங்ஙனம் விரைந்துவருங்கால் வழிநடுவில் சதாகாலமும் பக்தர்களின் விருப்பத்தைப் பூர்த்திசெய்பவரும், அழிவற்றவரும் பார்வதிநாதனுமாகிய ஈசன் காமதேனுவினது பக்தியைச் சோதிக்கும்பொருட்டுப் புலிவடிவங்கொண்டார். (5) இத்தருணத்தில் துள்ளித்துள்ளிக் குதித்துக்கொண்டு பசுவினது சமீபத்தில் அதன் மாம்சத்தில் விருப்பங்கொண்ட கொடிய புலியானது விரைந்துவந்தது. (6) அப்பொழுது ஆச்சரியமுற்ற காமதேனு நான்கு பக்கங்களிலும் உற்று நோக்கிற்று. (6½) பயங்கரமான புலி நெருங்குவதைக் கண்டும் காமதேநு மேன்மேலும் செல்வதற்கு முயன்றது. (7) அதனையுணர்ந்த புலியானது தனது வாலைப் பூமியில் அடித்து, கால்களால் நிலத்தைக் கீறிக்கொண்டு, பசுவின திமிலைப்பற்றிற்று. (8) சிவந்த கண்களுடனும், கோரப்பற்களுடனும் நீண்டவாலுடனும், தன்னைக் கொல்லவேண்டுமெனும் நிச்சய எண்ணத்துடன் விரைந்துவந்த புலியைப்பார்த்து காமதேனு பயம் நீங்கியதாய், அப்பொழுது ஒன்று கூறலாயிற்று. (9) 'ஓ சாதுவே! உனக்கு ஒரு குற்றமுஞ்செய்யாத என்னை ஏன் வீணே கொல்லுகின்றாய்! நான் இந்த ஜன்மத்தில் ஒருவருக்கும் ஒருதீங்கும் செய்

தறியேன். (10) முற்சென்மத்தில் யான் எவருக்கேனும் ஏதேனும் குற்றஞ்செய்திருப்பின் 'புலியே! நீ அதனை எனக்குக்கூறுவாயாக' ($10\frac{1}{2}$)

புலியின் மறுமொழி.

"பசுக்கள் "புலிகளுக்கு இரை" யென, படைத்தற் கடவுளாகிய பிரமனால் முன்னரே படைக்கப்பட்டன என்பதை, ஏ பசுவே! நீ அறியாய்போலும்! ஆகவே, நீ எனக்கு இரையாகக் கற்பிக்கப்பட்டிருக்கின்றாய் என்பதை உணர். உனக்கு இதிற் சிறிதும் சந்தேகம் வேண்டாம். ($11\frac{1}{2}$) கொடிய பாவங்களைச் செய்தேனும், அல்லது மற்றவரை இம்சித்தேனும் எப்பொழுதும் பிராணிகள் தமது ஆத்மாவை (தேகத்தை)க்காப்பாற்றிக் கொள்ளவேண்டும்." ($12\frac{1}{2}$) இந்தக் கொடிய சொல்லைக்கேட்ட காமதேநு, மஹாதேவனை மனத்தால் தியானித்துக்கொண்டு, மிகப்பிரீதியுடன் வருமாறு மறுமொழி கூறியது. ($13\frac{1}{2}$)

புலியே! உன்னிடம் ஸத்தியமாகக் கூறுகின்றேன்; கேள். இங்குச் சமீபத்தில் ஒரு ஆச்சிரமமிருக்கின்றது. அதில் கபிலர் என்னும் முனிவர் ஒருவர் தவஞ்செய்துகொண்டும் தியானசமாதிகள் புரிந்துகொண்டுமிருக்கின்றார். ($14\frac{1}{2}$) அவர் 'ஸ்ரீவர்த்தனஈசர்' என்னும் மூர்த்தியைத் தினந்தவறாமற் பிரீதியுடன் பூஜிப்பவர். யானும் அந்த ஸ்ரீவர்த்தனேசனது பூஜைக்காகவே கங்காநதிக்குச் சென்று அதன் தீர்த்தம் எடுத்துவருகின்றேன் ($15\frac{1}{2}$) இந்தக் கங்காதீர்த்தத்தினாலேயே நான் ஈசனைப் பூசித்தல்வேண்டும். சிவபூஜை செய்யாவிடில் யான் உணவு உட்கொள்வதில்லை. ($16\frac{1}{2}$) ஆகவே இப்பொழுது ஆச்ரமஞ்சென்று சிவபூஜையியற்றி, எனது பசுங்கன்றை எம்பிரான் சந்நிதியில் விடுத்து உடன் (மீண்டும்) வருகின்றேன். ($17\frac{1}{2}$)

பசுவின் வசனத்தைக்கேட்ட புலி மறுமொழி கூறியதாவது; "பசுவே! பசித்துநிற்கின்ற என் சமீபத்திற்கு நீ மீண்டும் வாராவிடில் பசியினால் கொளுத்தப்பட்டு நிற்கின்ற என் கதி என்ன? அதனைக்கூறு." (19)

கபிலை கூறுதல்.

புலியே! உனக்கு எவ்வாறு கூறின் நம்பிக்கையுண்டாகுமோ அவ்வாறு யான் இப்பொழுது சபதஞ் செய்கின்றேன். யான்

ஆச்சிரமஞ்சென்று பூஜையை நிறைவேற்றி மீண்டும் ( திரும்ப ) உன்னிடம் வாராதிருப்பின், பெற்ற தாயைக்கொன்றவன், தகப்பனுக்குத் துரோகஞ்செய்தவன், தற்கொலை செய்துகொண்டோன், கர்ப்பத்திலிருக்கின்ற சிசுவைக் கரைத்தவன், குருஹத்திசெய்தவன், சுத்தவீரனைக்கொன்றவன், குதிரையைச் சங்கரித்தவன், ராஜஹத்தி செய்தவன், (அரசனைக்கொன்றவன்) மாதரையழித்தவன், நகரங்களை நாசஞ் செய்தவன், சகோதரைச் சங்கரித்தவன் ஆகிய இம்மகாபாதகஞ் செய்தோர் எந்தகையகதியையடைவார்களோ அத்தகைய கதியை யான் அடைவேனாக. (22) இனியுங் கூறுகின்றேன், செவியுறுவாய்; பெற்றதாயைக்கூடினவன், உடன்பிறந்தாளைக் கற்பழித்தவன், மருமகளைக் கெடுத்தவன், தன் மகளை மானபங்கஞ் செய்தவன், வேடுவர் பெண்ணைச் சேர்ந்தவன் ஆகிய இம்மகாபாதகர்கள் அடையுங் கதியை யான் அடைவேனாக. (24) மிருகங்களைக் கொன்று தின்னும் புலியே! வேதவிதிக்கு விலக்கான ஆசாரமுடையவன், அதர்மத்தை ஆவலோடு அனுஷ்டிப்பவன், பிரம்மயஞ்ஞம் (பிரம ஆராதனை) மனிதயஞ்ஞம் (மனிதபூஜை) தேவயஞ்ஞம் (தேவ திருப்தி) பிதிரர் யஞ்ஞம் (பிதிரர் ஆராதனை) பூதயஞ்ஞம் (பிறபிராணிவர்க்கங்களைத் திருப்திசெய்வித்தல்) என்னும் ஐந்து வேள்விகளையும் விடுத்த அந்தணன் ஆகிய இவர்கள் அடையும் பாவமனைத்தையும் யான் மீண்டும் வாராதிருப்பின் அடைவேனாக. (25½) இனியும் பலபல கூறுவானேன்? ஸ்ரீசிவபெருமானது பாதங்கள் சாக்ஷியாகச் சபதம் செய்கின்றேன் (ஆணையிடுகின்றேன்) கேள். (26) சத்தியத்தினல் சூரியன் பிரகாசிக்கின்றான். சத்தியத்தினல் காற்று வீசுகின்றது. நதிகள் யாவுஞ்சென்று ஒடுங்குமிடமாகிய கடலும் சத்தியத்தினல் கரை கடக்காதிருக்கின்றது. (27) சத்தியத்தினல் மழைபொழிகின்றது. சத்தியத்தினலேயே பூமியில் தானியங்கள் யாவும் செழிக்கின்றன. அந்தச் சத்தியம் அழிந்துவிடுமாயின் அகாலத்தில் பிரளயமுண்டாகி, உலகம் யாவும் அழிந்துவிடும். (28) கோரப்பற்களையும் கொடிய நகங்களையும் ஆயுதமாகக்கொண்டு நின்ற புலிவேஷக்கடவுள், பசுவினது சபதத்தைக் கேட்டு, "யான் ஒருமுகூர்த்தநேரம் இங்கு நிற்பேன். எனக்கோ பசி மிகக்கடுமையாக இருக்கின்றது. குறித்த நேரத்திற்குள் நீ இங்கு வாராவிடில் யானே அங்கு விரைந்துவந்து, உன்னைக் கன்றுடன் கொன்று தீர்ப்பேன்! இதில்

உனக்குச் சந்தேகம் வேண்டாம்" எனக்கூறிப் பசுவை விட்டுவிட்டார். (30½) பசுவும் அவ்வாறே செய்வதாகப் பிரதிக்கினைசெய்து இறைவன் சமீபத்தை யடையலாயிற்று. (31)

ஏழாம் அத்தியாயம் முற்றும்.

## எட்டாம் அத்தியாயம்.

### சௌநகாதி முனிவர்கள் கூறல்.

சாஸ்திரங்களின் கரைகண்டு அவற்றில் மறைந்துள்ள எல்லாப் பொருள்களையும் எடுத்துவிளக்கும் சூதமுனிவ! கபிலை வரம் பெற்ற கதையைச் சிறிது விரித்துக்கூறுவீராக. (1)

### சூதர் கூறல்.

முனிவர்களே! சிவபூஜையினாலுண்டான புண்ணியப் பெருமைகளைக் கேளுங்கள்; பாவங்களையகற்றும் பரமேசன் திருவிளையாடலைப் பகர்கின்றேன் கேளுங்கள். இத்திருவிளையாடலை அன்போடு கேட்போர்க்கு அரன் எல்லாப்பொருளையும் அருள்வார். (2½) இனி, புலியினிடம் விடைபெற்றுவந்த கபிலை, பக்தியோடு ஈசன் திருச்சந்நிதியையடைந்து, புலிக்குத் தான்செய்துவந்த சபதத்தையும் மறவாது பக்தியுடன் பூஜை புரிந்தது. கங்கையினின்றும் கொணர்ந்த தீர்த்தத்தின் ஒருபாதியை வைத்துக்கொண்டு மற்றொரு பாதியால் மஹேசனை அபிஷேகம்செய்து, சந்தனம் புஷ்பம் அக்ஷதைமுதலியவற்றால் பூஜித்து, பக்தியோடு பரமேசனைப் பிரார்த்தித்தது. (5)

### பசுவின் பிரார்த்தனை.

உலகேச! பல உருவமுள்ள கண்களையுடையோய்! உலகெலாம் வியாபித்து நிற்போய்! மஹேச! பார்வதிநாத! உம்மைச் சரண்புகுந்த அடியாளைக் காப்பீராக! (6) பக்தர்களிடத்துப் பிரீதியுறும் ஈச! முன்னர்க்காலபாசத்தால் கட்டுண்ட மிருகண்டு முனிவரின் புதல்வர் மார்க்கண்டேயரை அக்காலபாசத்தினின்றும் விடுவித்தவர் தேவரீரேயன்றோ? மிகுந்த புத்தியுடையவரும் உமது பக்தருமாகிய நந்திகேசர் மிருத்தியுவின் (யமனின்) கைப்பட்டு நிற்

குங்கால், நீர் கருணைகூர்ந்து அவரை யமபாசத்தினின்றும் விடுவித்து உமது துவாரபாலகராக (வாயிற் காப்போராக) நியமித்தருளினீர். (8) நன்மைசெய்யும் சங்கரன் என்னும் பெயருடையீர்! அவ்வாறே அடியாளையும் புலியினது பயத்தினின்றும் காத்தல் வேண்டும். (8½) எனது கன்றைத் தமது பாதாரவிந்தங்களில் அர்ப்பணம்புரிந்து செல்கின்றேன். பார்வதீச! உமது பாதசேவையினால் இவ்விளங்கன்றும் என்னைப் பிரிவதனாலுண்டாகும் விசனத்தைக் கடக்கும். இதில் ஐயமில்லை" (9½) எனத் தெரிவித்து, தனது இளங்கன்றை மஹாதேவனது சந்நிதியில் விட்டுவிட்டு, இலிங்கத்தின் வடபக்கத்தில் சந்தோஷத்துடன் தனது கொம்பினாற் கீறி, அதனை, (மிஞ்சியுள்ள மற்றோர்பாதி) கங்காஜலத்தினால் நிறைத்து பன்முறை ஈசனைவணங்கி, மஹேச! யான் எவ்வாறு தினந்தோறும் கங்கை நீரினாலேயே தேவரீரைப் பூஜைபுரிந்தேனோ அவ்வாறே தினந்தோறும் இந்தக் கங்கை நீரினாலேயே தமக்குச் சாசுவதமாய் அபிஷேகம் நடைபெற்றுவருவதாக. (12) கங்காதேவி இந்தத்தீர்த்தத்தில் சாந்நித்தியம் (அருள்விலாசம்) செய்யுமாறு தேவரீர் திருவுளங்கொள்க. எனத் தேவேசனைப் பிரார்த்தித்துப் பின்னர், விருப்பிய வரந்தரும் காமதேநு, கபில முனிவரரை நமஸ்கரித்துக் கூறியது:— (13½) அரிய பெரிய தர்மங்களையறிந்த முனிவ! சிவபக்தியிற் சிறந்த புத்தியுடையோய்! யான் கங்காநதிக்குச்சென்று தலைமூழ்கி அதில் தீர்த்தம் எடுத்துக்கொண்டு விரைந்து வருங்கால் வழி நடுவில் புலியொன்று குறுக்கிட்டு, என்னை அக்கணமே தனக்கு இரையாகவேண்டுமெனத் தடுத்தது. அப்பால் அதற்கு நம்பிக்கையுண்டாகும்பொருட்டு, யானும் சத்தியம் (சபதம்) செய்துவந்தேன். (16) முனிபுங்கவரே! (முனிவரிற் சிறந்த அந்தண!) அதுபோல் இப்பொழுது சிவபூஜை முடித்துக்கொண்டு தம்மிடத்தும் தெரிவித்துவிட்டு, (அனுமதிபெற்றுக்கொண்டு) இதோ புலியினிடத்துச் செல்கின்றேன். (17½) எனக்கூறி முனிவரை வந்தனம்புரிந்து, அப்பால் புலியினது சமீபஞ்சேர்ந்தது. அங்குச்சென்றவுடன் சிவபெருமானை ஹிருதயத்தில் தியானித்தவண்ணமே புலியைநோக்கி வசனமொன்று விளம்பியது.

"புலியே! உனது கிருபையினால் இப்பொழுது சிவபூஜை நிறைவேறிற்று. (19) பசித்து நின்ற உனது பசி இப்பொழுது தீர்வதாகுக. (அது தீரும்பொருட்டு (இதோ) இருக்கின்றேன்!)

மிருகங்களைத்தின்னு மியல்புடைய புலியானது பசுவின் பேச்சைக்கேட்டு, எல்லோரையும் நடுங்கச்செய்வதாகிய தனது (பயங்கர) உருவத்தை விடுத்து, அவ்விடத்திலேயே மறைந்தது. பசுவும் அதிசயமுற்றது. (20½) இதற்கிடையில் புலியின் உருவத்தை விடுத்த ஈசன் தமது பெருங்காளையின் மீதமர்ந்து, அன்பர்களின் அபீஷ்டங்களை யளிக்கும் மஹாதேவ வடிவத்துடன் அங்குத்தோன்றலானார். (21½)

### மஹேசன் திருவாக்கு.

"பசுவே! உனது பக்தியைப் பரிசோதிக்க விரும்பியே இங்ஙனம் யாம் புலியுருவங்கொண்டோம்; உன்னைத்தின்னவும் முயன்றோம். ஆனால், உன்னிடத்தில் ஸத்தியம் நிலைத்து விளங்குகின்றது. உனது திடபக்தியினால் யாம் மிக்க களிப்பெய்தினோம். சிறந்த நோன்புடையாய்! நீ விரும்பிய வரத்தைக்கேள், அளிக்கின்றோம்." (23)

இவ்வண்ணம் இயம்பிய ஈசனது வசனத்தைக்கேட்டு, காமதேநுவும் ஆச்சரியத்தால் மலர்ந்த கண்களையுடையதாகி சிவபெருமானுடைய பாதாரவிந்தங்களைப் பன்முறை வணங்கி மகிழ்ந்த மனத்துடன் உள்ளங்குளிர்ந்து, மீண்டும துதிக்கலாயிற்று. (24)

### தேநுவின் துதி.

சிவமே! போற்றி. அழியாப் பொருள்களிற் சிறந்தோய்! போற்றி. உயிர்களின் இறையே! போற்றி. உயரிய ஈசனே! போற்றி. திங்களை முடியிலணிந்தாய்! போற்றி. (25) நித்தனே! போற்றி. நீலகண்டனே! போற்றி. சத்தியனே! போற்றி. ஜகத்காரணனே! போற்றி. என்றும் அழியாதஸத்தே! போற்றி. மூவுருவம் ஆனாய்! போற்றி. ஆக்கல், அளித்தல், அழித்தல் என்னும் முத்தொழிற்காரண! போற்றி. (26) உலகத்தின் தலைவ! பிரமனாய் நின்று நீரே இவ்வுலகத்தைப் படைக்கின்றீர். திருமாலின் திருவுருக்கொண்டு இதனைப் பாலிக்கின்றீர். உருத்திரவடிவம் பூண்டு சராசரவடிவமாகவிரிந்திராநின்ற இவ்வுலகங்களியாவற்றையும் நீரே அழிக்கின்றீர் (27) ஆதலின், உலகின் தலைவ! போற்றி. உலகெலாம் ஆனாய்! போற்றி பக்தர் தம் பாவத்தைச்சிதைப்போய் போற்றி. மூவுலகின் முதல்வ! போற்றி மாதேவ சம்புவே! உம்மைப் பன்முறை போற்றுகின்றேன். அடியாளைக் காப்பீராக.

(28½) இவ்வாறு காமதேநுவினால் துதிக்கப்பெற்றவரும் பக்தர்களின் விருப்பததைப் பூர்த்திசெய்பவருமாகிய தேவேசன், "என் முன்பாக உனக்கு வேண்டிய வரத்தைக் கேள்! அளிக்கின்றேன்" எனக் கட்டளையிட, காமதேநுவும் மிகப்பிரீதியுற்று, அகிலேசனாகிய பரமேசுரனைப் பார்த்துப் பேசலுற்றது. (30½)

பரமேச! உம்மிடத்து அழியாதபக்தி (அன்பு) அடியாளுக்கு உண்டாகுமாறு அநுக்கிரகம் செய்யும். அஃதொன்றே எனக்கு எல்லா நலனுந்தருவதாம். இதனையன்றி வேறொன்றையும் யான் விரும்பேன். (31½) தேவரீர் இங்கு எக்காலமும் சாந்நித்தியம் செய்துகொண்டு (அருள் சுரந்துகொண்டு) பக்தர்கட்கு வரமளித்து விளங்கிவருவீராக! தம்மை உலகோர் "வியாக்கிரேச்வரன்" புலிக்கடவுள் எனப் பெயர் கூறிவழங்குக. (32½) யான் கொம்பினாற் கீறி, கங்கைநீர்கொண்டு நிரப்பிய தீர்த்தத்தினால் தேவரீருக்குத் தினந்தோறும் பூஜை நடைபெற்றுவருவதாக! என்னுடைய பிரபுவே! (என்னுடைய வள்ளலே!) யான் வேண்டும் வரம் இவையே யாகும். யான் இவையன்றிப் பிறிதொன்றையும் விரும்பேன். (34) தேனுவின் வசனத்தைக் கேட்ட ஈசன் மறுமொழி பேசலுற்றார். "இங்கு எவர்கள் புண்ணிய மிகுதியினால் பக்தியுடன் பூஜிக்கின்றனரோ அவர்களுக்கு யான் கைவல்யம் (மோக்ஷம்) அளிக்கின்றேன். உனக்கு இதிற்சிறிதும் ஐயம் வேண்டாம். 35½) நீ காசியினின்றும் எடுத்துவந்து கொம்பினாற்கீறி பூமியில் நிரப்பிய கங்கைநீரால் எனக்குத் தினந்தோறும் பூஜை நடைபெறுவதாகுக அந்த நீரில் ஸ்ரீ கங்கையின் சாந்நித்தியம் (அருள்) துலங்குவதாகுக" என வரமளித்து ஈசன் மறையலானார். (37) பரமேசன் கிருபைபெற்ற பசுவும் தனது கன்றுடன் மீண்டு தேவேசனைப் பூஜித்தது. (38) பரமேசனது இத்திருவிளையாடலைக் கேட்போர் புத்திரர் பேரர் முதலிய பேறுகளைப்பெற்று நீண்டகாலம் புவியில் சுகமுற்று, பின்னர், சிவலோகத்தை எய்துவர். (39½)

எட்டாம் அத்தியாயம் முற்றும்.

# ஒன்பதாம் அத்தியாயம்.

## முனிவர்களின் கூற்று.

“சூதமுனிவ! மிக்க ஆச்சரியமளிக்கின்ற சிவ பூஜையினது பெருமை, இப்பொழுது தம்மால் வருணிக்கப்பெற்றது. இனி, சிவனடியார் பெருமையை (சிவ பக்தர் தம்மகிமையை)த் திருவாய் மலர்ந்தருள்வீராக” என வேண்ட, சூதரும் சொல்லலுற்றார். (1½)

## சூதர் கூறல்.

முனிவர்களே! கேளுங்கள். பாவங்களை நீக்கிப் பரிசுத்தந் தரும் பெரியோர் பெருமையைச் செவியுறுங்கள். (2) சிவபக்தர்கள், சிறந்த தன்மைகளை உடையவர்கள்; (மஹான்மாக்களாவர்) சிவ பூஜையிலேயே பெரு விருப்பங்கொண்டவர்கள்; ஸ்ரீ ருத்திரனது திருநேத்திரத்தினின்றுந் தோன்றிய ருத்திராக்ஷ மாலைகளை ஆபரணமாகப் பூண்டவர்கள்; விபூதியின் முப்படையினால் அலங்கரிக்கப்பெற்ற நெற்றியையுடையவர்கள். இத்தகைய பெரியோர் பலர் அத்தலத்தில் ஈசனது பிரசாததைதவேண்டி வாசஞ் செயகின்றனர். (3) மோக்ஷபதத்தைப் பெறுதவர்களாய் (அதனைப் பெறவேண்டுமென்னும் விருப்பமுடையவர்களாயிருக்கின்ற அப்பெரியோர்களில்) சிலர் ஈசனுக்குப் பிரீதியளிக்கும் யாகத்தால் (ஈசனை) ஆராதிக்கின்றனர்; வேறு சிலர் காயக்கிலேசமுற்று (உடலைவாட்டி)த் தவஞ்செய்கின்றனர்; மற்றுஞ்சிலர் சிவபூஜையே செய்கின்றனர்; (4) பின்னும் பலர் பற்பலவிதமாக ஈசனை ஆராதிக்கின்றனர். (4½) கபிலமுனிவர், புலிக்காலர் (வியாக்கிரபாதர்) மங்களர், எனும் முனிவரர் மூவரும் எங்கு வசிக்கின்றனரோ அங்கு இன்னும் பல பெரியோர் வசிக்கின்றனர். அவ்வீசனுக்குக் கீழ்பாலுள்ள மூன்று மலைகளிலும் அவர்கள் வாழ்ந்துவருகின்றனர். (6) தர்மத்தில் பிரியமுள்ள கௌதமமுனிவர், அதன் தென்பக்கத்திலுள்ள மலையில் வாழ்கின்றனர். (1) (6½) ஈசனுக்கு மேற்பக்கத்தில் ஜடாயு கொடிய தவம் இயற்றுகின்றார். வசிஷ்டர் என்ற சிறந்த முனி

---

(1) இங்ஙனம் புண்ணியபுருஷர் பலர், ஈசனைச்சூழ்ந்துள்ள மலைகளில் வாழுங்காரணம் பற்றியே இத்தலத்தில் கிரிப்பிரதக்ஷிணம் (மலையை வலம் வருதல்) மிகவிசேஷமாக அனுஷ்டிக்கப்பெறுகின்றதாம்.

வரும் சம்பாதி என்னும் முனிவரும் தர்மத்தில் விருப்பங்கொண்டு அங்கு நித்தம் தவஞ்செய்கின்றனர். ($7\frac{1}{2}$) மேற்குத் திகிலுள்ள மலைகள் யாவும் அவர்களின் வாசத்தின்பொருட்டே அமைந்து உள்ளன. ($8\frac{1}{2}$)

இவர்கள் ஆங்காங்கு வெகுகாலம் வசித்துச் சிவபூஜைசெய் கின்றனர். அவர்களின் அபீஷ்டங்களை நிறைவேற்றிக்கொடுத்து அங்கு ஈசன் ஸ்ரீ பிருஹதம்பாளுடன் (கருணையிற் பெரியாளாம் அன்னையுடன்) சதாகாலமும் வசித்துவருகின்றார். (10) எவர்கள் இங்குச் சங்கரனைப் பார்வதியுடன் பூஜைசெய்கின்றனரோ அவர்க ளுக்குத் தர்மத்தில் புத்திதோன்றும். இவ்வுலகில் மக்கள், மருமக் களைப் பெறுவார். பார்வதீசன் பிரசாதத்தால் பரம சுகத்தையும் பெற்று வாழ்வர். ($11\frac{1}{2}$) பிராம்மணர், க்ஷத்திரியர், வைசியர், சூத் திரர் நால்வரும் தவசிகளாயும் தடதம் வருண ஆச்ரமங்களுக்கு விதித்த தர்மங்களுடனும் சதாகாலமும் வாழ்ந்து வருகின்றனர். ($12\frac{1}{2}$) இஙகு வாழ்வோர்க்கு அதர்மத்தில் (தர்மவிரோதமான காரி யததில்) புத்தி தோன்றுவதில்லை. (13) அங்கு வசிக்கின்ற பசு, பக்ஷி, மிருகங்கள் யாவும் புண்ணியம் பெறுகின்றன. இந்தப் புண்ய கதையை எவர்கள் ஈசன் சந்நிதியில் பாராயணஞ்செய்கின் றனரோ அவர்களும இதனைக் கேட்போர்களும் பாவம் நீங்கிப் பரி சுத்தர்களாவர். ($14\frac{1}{2}$) ஈசன் அவர்கள் விரும்பியவற்றை அளிப் பார். ஈசன் திருவிளையாடல் நிறைந்ததும், இப்பொழுது என்னால் வருணித்துக் கூறப்பெற்றதுமாகிய இந்த க்ஷேத்திரமான்மியத் தைச் சதாகாலமும் படிக்கின்ற மனிதர்களும் இதனைக் கேட்போர் களும் மஹேசன் அனுக்கிரகத்தினால் மனத்துயரம் நீங்கி, நோய் களற்று, செல்வமுற்று, மக்களைப் பெற்று, பிரதிதினமும் மகிழ் ந்து வாழ்வார். (16) ஒன்பதாம் அததியாயம் முற்றும்.

## பத்தாம் அத்தியாயம்.

ஸ்ரீ ஸ்காந்தபுராணத்தின் கண் நாரதர் கூறல்.

[ பார்வதிதேவியார் ஸ்ரீ சங்கரனைப் பார்த்துக்கேட்டல். ]

சங்கர ! பக்தவத்ஸல ! (அன்பரிடத்து அன்புநிறைந்தோய்!) நரர்களின் பாவத்தை நாசஞ்செய்யும் புண்ணிய நீரோடைகளின்

மாகாத்மியத்தைத் தேவரீர் சகல ஜீவர்களினது நன்மையின்பொருட்டும் தெரிவிப்பீராக. ($1\frac{1}{2}$)

ஸ்ரீ சங்கரன் கூறல்

தாமரைபோலும் கண்களையுடைய தேவி! முன்னர்ப் பிரமனிடஞ்சென்று கேட்ட துருவாசமுனிவருக்குப் பிரமனால் கூறப்பெற்ற பெருமையுடைய (காபிலப்) என்ற ஓர் இலிங்கமுளது ($2\frac{1}{2}$) அது கபிலர் என்னும் பெயர்பூண்ட ஸ்ரீமஹாவிஷ்ணுவினால் பாதாளத்தில் சதாகாலமும் பூஜிக்கப்பெற்றது. (3) அது காமதேனுவினது பால்கொண்டு அபிஷேகம் செய்யப்பெற்றது. அதனால் (அம்மகிழ்ச்சியினால்) அவ்விலிங்கம் பூமியைப் பிளந்துகொண்டு வெளித்தோன்றியது. (ஆதலின் சுயம்புவெனக் கூறப்படுவது;) இலிங்கம் வெளித்தோன்றியதைக் கண்டு கோபமுற்ற காமதேநு, தனது காற் குளம்பை, இலிங்கத்தின் தலையிலவைத்து "இனி வளராதிருப்பையாக" எனக்கூறியது. பசுவினது காற் குளம்பினால் அடையாளமிடப்பெற்ற அவ்விலிங்கம் அதற்கப்பால் வளரவில்லை. ($4\frac{1}{2}$)

அந்த இலிங்கம் ஆதியில் வெள்ளிபோன்ற நிறமுடையது; மத்தியில் பொன்போலிலங்குவது; முடிவில் சூரியன்போல் சிவந்துதோன்றுவது; சுயம்புவானது (தானே முளைத்தது), ஐந்து முகங்களையும் மூன்று கண்களையும் முறையே உடையது; ஐந்து வர்ணம் கலந்தது; பாதாளம்வரை வேரோடி நிலைபெற்று பயங்கரமாய்த் தோன்றுவது; (6) கபிலர் என்னும் முனிவரால் முன்னர், கிருதயுகத்தில் பூஜிக்கப்பெற்றது. முன் கிருதயுகத்தில் கபிலேசன் என கியாதி (புகழ்) பெற்றது (7) திரேதாயுகத்தில் அக்கினி பகவானால் பூஜிக்கப்பெற்று ஆக்கினேய இலிங்கமென வழங்கப்பட்டது. துவாபரயுகத்தில் இந்திரனால் பூஜிக்கப்பெற்றது. அது ஆதியந்தமற்ற மஹாலிங்கமாகும் (8) கலியுகத்தில் கபிலைக்காமதேநுவினால் கருத்துடன் பூஜிக்கப்பெற்றது அந்த லிங்கத்தின் முன்பாக ஓர் உயர்ந்த தீர்த்தமிருக்கின்றது. (9) அது பாதளத்தினின்றும் வெளிவந்த கபில மஹாத்மாவினது வழி நடுவில் மறைவான பில(த்துவார)மாக இருந்தமையின் அதற்கு "காபிலம்" எனக் காரணப்பெயரிடப்பெற்றது. (10) நீரினால் நிறைந்த அந்தப் புண்ணியதீர்த்த ஓடையைத் தரிசித்தோர்க்கும் பாவம் நீங்கும்.

(11) பார்வதி! அந்தச் தீர்த்தத்தை மெய்யினால் தீண்டிய ஆண் பெண் அனைவரும் சுவர்க்கசுகம் பெறுவர். முறைப்படி அதில் சிநானம் (தலை முழுகுதல்) பானம் (பருகுதல்) செய்தோர்க்கு நரை திரை. மூப்பு சாக்காடு நீங்கும். (12) அதில் ஒருமுறை சிநானஞ்செய்தோரின் புண்ணியத்தைக் கூறுகின்றேன்; கேள். (1 வாஜபேயம், என்னும் யாகஞ்செய்தவரும் () 2அசுவமேதம் என்னும் வேள்வியியற்றினோரும் எத்தகைய பலனைப்பெறுவார்களோ அத்தகைய பலன் முழுவதையும் அந்தத் தீர்த்தத்தில் ஒரு முறை சிநானஞ்செய்வோர் அடைவர். ஆனால் (விருப்பத்தோடு) வாஜபேயமுதலிய யாகஞ்செய்தோர்க்கு மறு பிறவி நீங்காது: இத்தீர்த்தத்தில் தலைமுழ்கினோர்க்கோ அவ்வாறு மறுபிறவிதோன்றுவதில்லை. (13½) சகல பிராணிகளுக்கும் நன்மையுண்டாகும்பொருட்டு கார்த்திகைமாதப் பூரணியையின் நடுப்பகலில் பத்துநாழிகைவரை

---

(1) வாஜபேயம்:- இஃது இருபத்தேழு யாகங்களில் ஒன்று. வாஜம் என்பது அன்னம், நெய் என்ற இரண்டினையும் குறிக்கும். அவற்றில் ஒன்றனைப்பருகி நியமத்துடன் நிறைவேற்றவேண்டிய யாகமாதலின் இதற்கு வாஜபேயமெனப்பெயர் வழங்குகின்றது

(2) அசுவமேதம்:- அசுவசாஸ்திரத்திற்கூறியவாறு சிறந்த லக்ஷணங்கள் அமைந்தோர் குதிரையைப் பரிசுத்த வேதமந்திரங்களால் புரோக்ஷித்து (மந்திரதீர்த்தத்தினால் தெளித்து) அதன் நெற்றியில் தனது ஜய பிருது (பிரதாப) பத்திரிகையைக்கட்டி, அதனை அரசன் புவியெங்கும் சஞ்சரித்து வருமாறு விடவேண்டும் குதிரையைப் பாதுகாத்து வருமாறு ஒரு பராக்கிரமசாலியை அனுப்பவேண்டும் இவ்வாறு வருஷமுடியும் வரை கவனித்துப்பின்னர் வருஷமுடியுங்கால் குதிரை திரும்பிவந்தபொழுது (அல்லது எவரேனும் குதிரையைப் பிடித்துக் கட்டிவிடின் அவரோடு போர் செய்து குதிரையை மீட்டுக்கொணர்ந்து விதிமுறைப்படி அதனை வதஞ்செய்து அதன் வபையினால் (அதாவது வயிற்று நாபிக்குள் உள்ள வெண்துகில்போன்ற புரையாகியகிணத்தினால்) ஓமஞ்செய்து தேவர்களை மகிழ்வித்தலே அசுவமேதயாகமெனக் கூறப்பெறுகின்றது! இந்தயாகஞ்செய்தோர்க்கு அவரவர்விருப்பத்திற்கேற்றவாறு பயனுண்டாம். உதாரணமாக பிரமஹத்தி முதலிய பாவஞ்செய்தவர் அப்பாவம் நீங்கும் பொருட்டுச்செய்வர் அவ்வாறே சுவர்க்கத்தை விரும்பினோர், சுவர்க்கம் பெறுவர். நிராசையுற்று அந்த யாகம் செய்வோர் மோக்ஷம்பெறுவர். ஆனால் அகண்டபூமண்டலத்திற்கும் ஏகசக்ராதிபதியாயிருப்பவனே இந்த யாகஞ் செய்தற்கு உரியவனாவன்.

யில் இம்மூவுலகிலுமுள்ள தீர்த்தங்கள் யாவும் அந்தக் கபில தீர்த்தத்தில் சாந்நித்தியம் (அருள்) செய்கின்றன. (15)

அந்தப்புண்ய வேளையில் சிநானஞ்செய்கின்ற பாவஸ்திரீகளும் பாவபுருஷர்களும் தம்முடைய பாவங்கள் யாவும் நீங்கப்பெற்று, பிரமலோகத்தை யடைகின்றனர். (16) அந்தத் தீர்த்தத்தின் சந்நிதியில் தானம் கொடுப்பவர்களும், சிரார்த்தஞ்செப்பவர்களும் (1) சந்திரலோகத்தை யடைகின்றனர் (17) கன்னிகாதானஞ்செய்தோர், கோதானம வழங்கினோர், விஷ்ணுமந்திர உபதேசம் புரிந்தோர் ஆகிய இவர்கள் முறையே சுவர்க்கம், கைலாசம், வைகுண்டம் பிரமலோகம் என்னும் இவற்றை யடைகின்றனர். (18) வருஷந்தோறும் வருகின்ற கார்த்திகைமாதப் பூரணிமையின் நடுப்பகலில் இங்குக் கூறியவாறு இவ்வுலகிலுள்ள தீர்த்தங்கள் யாவும் அந்தக் கபில தீர்த்தத்தில் வந்து சேருகின்றன. (19) இங்குக் கூறுகின்ற மந்திரத்தை உச்சரித்து சிநானஞ்செய்தோர் அந்த (முற்கூறிய) பலன் முழுதையும் அடைகின்றனர்.

"இமம்" (மே கங்கே) என்ற அரியபொருளையுடைய மந்திரமே இத்தீர்த்தத்தின்கண் சிநானஞ்செய்யுங்கால் ஜபிக்கவேண்டிய மந்திரமாகும். ஆனல், அதன்கண் ஸ்நானஞ்செய்யும் பாக்கியம் பெற்றோர்க்குப் பரமபதம் பெறுதல் கூட அரியதன்று:—(இவ்வண்ணம் விதிமுறைப்படி சிநானஞ்செய்வோர் சர்வ வியாபியான ஈசனது பதத்தைப் பெறுவர்.) (20) உனது விருப்பத்தின் வண்ணம் உத்தம தீர்த்தத்தின் மகிமையைக் கூறினேன். இனி, வாயுபகவானது அரிய தவத்தைக் கூறுகின்றேன். (21)

இவ்வாறு வாமன புராணத்தில் க்ஷேத்திரமான்மியங்களைக் கூறுமிடத்து தக்ஷிண கோகர்ண க்ஷேத்திரமான்மியத்தைக் கூறுதலீகிய (2) நான்காம் அத்தியாயம் முற்றும்.

பத்தாம் அத்தியாயம் முற்றும்.

---

(1) தீர்த்தசம்பந்தமான கிரியை (சடங்கு) களைச்செய்வோர் சந்திரலோகத்தையடைந்து, இங்கு மண்மயமான சரீரம் பெற்று வாழ்வதுபோல் அங்கு ஜலமயமான சரீரம் பெற்று, அதற்கேற்ற உணவை உட்கொண்டு சுவர்க்க இன்பம் பெறுவரென வேதங்கூறும்.

(2) இவ்வாமனபுராணத்தில் ஈசன் பல ஸ்தல மான்மியங்களையும் புண்ணியகதைகளையும் கூறிவருங்கால் இத்திருக்கோகர்ண மான்மியத்தை

## பதினோராம் அத்தியாயம்.

### சௌனகர் முதலிய முனிவர் கூறல்.

"தொன்னூற் கடலைத் துகளறக் கண்டுணர்ந்த சூத முனிவ! முப்புரமெரித்த முக்கண்ணன் தலப்பெருமைகளை த்தமைமால் கேட்கப்பெற்றோம். சிறந்த பாக்கியமுடையோய்! அவ்வாறே பரிசுத்த தீர்த்தங்களின் பெருமைகளையு முணர்ந்தோம். இப்பொழுது கோகர்ணக்ஷேத்திரமகிமையைக் கேட்க விரும்புகின்றோம். (2) தாம் எல்லாவற்றையு முணர்ந்தவராதலின் அதனைக் கூறவேண்டுகின்றோம்." ($2\frac{1}{2}$) இதனைச் செவியுற்ற சூதமுனிவரும் முனிவர்களைநோக்கி ஈசன் சனகாதிமுநிவர்களால் சூழப்பெற்று பார்வதிதேவியாருடன் கைலையங்கிரியில் வீற்றிருக்குங்கால் அம்முனிவர்களால் வினவப்பெற்று, அவர் தமது கம்பீரக்குரலுடன் முன்னர்க் கூறியவாறு அப்பொழுது கூறலுற்றார். (4)

### ஈசன் கைலையங்கிரியில் முனிவர்களை நோக்கிக் கூறிய முறை.

முனிவர்களே! கோகர்ணக்ஷேத்திரத்தின் பெருமையைக்கூறுகின்றோம், கேளுங்கள். பூமியில் எமக்கு மிகுந்த சந்தோஷத்தை யளிப்பதும், எமது அருளை மிகுதியாகப் பெற்றதுமாகிய ஸ்தலம் மூன்று உள. (5)

அவற்றில் ஒன்று இமயமலையின் வடபாகத்திலுள்ளது. அது உத்தரகோகர்ணமாகும். மற்றொன்று மேலைக்கடற்கரையின் ஓரத்திலுள்ளது. அது சித்தர், கந்தர்வர் இவர்களால் போற்றப்பெற்றது. அதன் பெயர் பச்சிமகோகர்ணமாம். (மேலைக்கோகன்னமெனப்படும்) முனிவர்களே! அந்த க்ஷேத்திரம் தூய்மை பொருந்திய திவ்ய க்ஷேத்திரமாகும். ($6\frac{1}{2}$) அந்த க்ஷேத்திரத்தில் மாமுனிவர் பலர் நம்மைப் பூஜித்துச் சித்தி பெற்றனர். இனி, மூன்று

---

ச்சார்ந்த தீர்த்தமான்மியத்தை மட்டுங்கூறி, வாயுபகவானது தவமாகிய வேறோர் விஷயத்தைக்கூறத்தொடங்குகின்றார். அஃது இத்தலமான்மியத்தைச்சார்ந்ததன்று. ஆதலின் இந்நான்காமத்தியாயம் ஒன்றே இத்தலபுராணத்தின் பத்தாமத்தியாயமாக முதல்நூலில் சேர்க்கப் பெற்றிருக்கின்றது.

வது தக்ஷிணகோகர்ணம் என்னும் க்ஷேத்திரமாகும். (7½) அது காவிரியாற்றின் தென்கரையில் வெள்ளாற்றின் வடகரையில் விளங்கும் திவ்விய க்ஷேத்திரமாகும். அதுவே நமக்கு மிகப்பிரீதிகரமானதாம் (8½)

அங்குத் தேவர்களும் அசுரர்களும் கந்தர்வர்களும் சித்தர்களும், முனிவர்களும் தவஞ்செய்து மிகச்சிறப்பாகப் பல சித்திகளையும் பெற்றனர். அந்த க்ஷேத்திரத்தில் யாம் தேவியாருடன் வசிக்கின்றோம். (10) அந்த க்ஷேத்திரத்தின்கண் முன்னர் நியமத்திற் சிறந்த மங்கணர் என்னும் மகாசித்தர் மங்கணதீர்த்தம் என்னுப் தீர்த்தக்கரையில் அருந்தவம் புரிந்தார். (11)

அந்த மங்கண மகாத்மாவின் தவத்திற்கிரங்கி யாம் அங்குத் தோன்றலானோம். அங்குத் தோன்றிய எம்மை மங்கணர் மிகுந்த பரபரப்புடன் தமது சக்திக்கேற்பப் பூஜித்தனர். (12) மங்கணர் எம்மைப் பலஆண்டுகள் பூஜித்து உத்தமபதவியை அடைந்தனர். இவ்வாறே தவச் செல்வராகிய பற்பல ரிஷிகளும் பிதிரர்களும் பெரும் பேற்றைப் பெற்றனர். (13) இவ்வாறே மற்றும் பிரமன் முதலிய தேவர்களும், இந்திரன் முதலிய அஷ்டதிக்குப் பாலர்களும் அசுரர்களும் வேறு பல ராஜரிஷிகளும் அங்குப் பெருந்தவம் புரிந்து அரும் பேற்றை அடைந்தனர். (14½) என இவ்வண்ணம் முனிவர்க்கு உபதேசித்தபொழுது சௌநகாதி முனிவர் யாவரும் ஈசனைத் தேவியாருடன பூஜித்தனர் (15½)

## சூதர் கூறுதல்.

இங்ஙனம் அந்த க்ஷேத்திரத்தின் மஹிமையை யான் கேட்டவாறு கூறினேன். (16) இனித் தீர்த்தத்தின் பெருமையைத் தெரிவிக்கின்றேன். அந்த க்ஷேத்திரத்தில் உயரிய நற்பயனையளிக்கும் தீர்த்தங்கள் சிலவுள. அங்கு ஈசன் சந்நிதியில் காபிலம் என்ற உத்தமதீர்த்தமிருக்கின்றது. அந்தத்தீர்த்தத்தில் கபிலமுனிவர் யோகத்திலமர்ந்து கோகர்ணநாயகனைப் பல ஆண்டுகள் பூஜித்து ஈசனது இணையற்ற பிரீதிக்குப் பாத்திரமானார். (19) அந்தக் கபிலதீர்த்தத்தின் எதிரில் மங்கண முனிவரால் நிருமிக்கப்பெற்ற மாங்கணம் எனப்பெயரிய தீர்த்தமொன்றிருக்கின்றது. அது உலகி

லுள்ள தீர்த்தங்களிலெல்லாம் உத்தமமான தீர்த்தமாகும். (20) அந்த மங்கண தீர்த்தத்தின் முனபாக ஸ்ரீ தீர்த்தம் (லக்ஷ்மீதீர்த்தம்) என்ற சிறநத தீர்த்தமிருக்கின்றது. அங்கு ஸ்ரீமஹாலக்ஷ்மீ அரிய தவஞ்செய்தாள். (21) அவளது தவத்தைக்கண்டு மகிழ்ந்த ஈசன், அவளுக்கு வேண்டிய வரத்தையளித்தார். [$21\frac{1}{2}$] அந்த லக்ஷ்மீதே விநிருமித்த தீர்த்தத்தின் தென்கிழக்கில் இந்திரனல் நிருமிக்கப் பெற்ற தீர்த்தமிருக்கின்றது. [22] முன்னர், தேவேந்திரன் தான் விருத்திராசுரனைக் கொன்ற பாவத்தைத் தீர்த்துக்கொள்ளவேண் டித் தவம்புரிந்தான். அப்பொழுது மஹாதேவன் இந்திரனைப் பரிசுத்தஞ் செய்யுமாறு தீர்த்ததேவதைகளுக்கு ஆக்கினையிட, தீர்த்ததேவதைகளும் ஈசனுணைப்படி அங்குத் தேவேந்திரனைச் "சகல தீர்த்தங்களாலும்" முழுக்காட்டின. அதனல் இந்திரன் பரிசுத்தம் பெற்றன. ($23\frac{1}{2}$) ஆதலின் அந்த இந்திரனல் நிருமிக் கப்பெற்ற தீர்த்தத்தில் ஸ்நாநஞ்செய்வோர் அத்தகைய தூய்மை பெற்று நன்மை பெறுவர். (24) இனி, ஈசனுக்குத் தென்புறத்தில் பிரமதீர்த்தம் எனப் பெயருள்ளதோர் ஒடையிருக்கின்றது. சாபம் நீங்கவேண்டிப் பிரமதேவன் சரசுவதிதேவியாருடன் இங்கு அந் தத் தீர்த்தத்தின் கரையில் தவஞ் செய்தார். (25) அவரது தவத் திற்கு மகிழ்ந்த ஈசன் பிரமனுக்கு உலகததை சிருஷ்டித்தல் முத லிய சாமர்த்தியத்தைத் தந்தருளினர். (26) முனிவரிற்சிறந்த நா ரத! தீர்த்தங்களின் மான்மியம் இவ்வாறு கூறப்பெற்றது. இனிக் கூறவேண்டியதைக் கூறுகின்றேன் கேளும். (27) அந்தணரில் சிறந்தோய்! சகல புராணங்களிலும் இதிஹாஸங்களிலும் ஆக மங்களிலும் கோகர்ணஸ்தலமான்மியம் பலவாறு விரித்துக் கூறப் பெற்றுள்ளது. ஆகவே, ஒரு நூறுவருடஞ் சென்றாலும் அத்த லத்தின் பெருமைகளை யான் கூறுதற்குத் திறனற்றவன். ($28\frac{1}{2}$) ஆயினும், எனது சக்திக்கு இயன்றவாறு கூறினேன. மற்றைத்த லங்கள் யாவற்றிலும் இத்தலத்திற்கு நிகரான தலம் காண்பதரிது. ஆதலின் அந்தணர்களே! ஸ்ரீகோகர்ணனது நாயகியையும், 'பக் தர்களின் விருப்பத்தை யளிப்பவரும், ஸ்ரீ தக்ஷிணகோகர்ணநாத னுமாகிய மஹாதேவ ஈசனையும் பக்தியுடன் போற்றுவீராக. (31)

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 7 | 27 | மூன்றாவது | நான்காவது |
| ஷை | 28 | மூன்று | 26 |
| ஷை | 30 | மூன்று | 26 |
| 8 | 8 | இம்மூன்று | இந்த 26 |
| ஷை | 9 | மூன்று | 26 |
| 9 | 28 | மூன்று | 26 |
| 14 | 27 | வகுளா | வகுள |
| 16 | 13 | அவ்வயரிய | அவ்வுயரிய |
| 33 | 11 | மிஞ்சி | எஞ்சி |

குறிப்பு:—உடனிருந்து கவனிக்கக் கூடாமையால் பிழைதிருத்தம் முழுதும் போடவில்லை. அடுத்த பதிப்பில் திருத்தமாக வெளியிட முயல்வேன்.

19-வது பக்கத்தில் 19 என்ற எண் முடிந்தவுடன் நான்காம் அத்தியாயம் முற்றுப் பெறுகின்றது. அப்பால் சௌநகர் முதலிய முனிவர் கூறல் ஐந்தாமத்தியாயத்தின் ஆரம்பமாகும். எனவே, '4' 5' என்ற இரண்டு அத்தியாயங்களும் தனித் தனியே பிரியாது ஒன்று சேர்ந்து அச்சாகிவிட்டது பிழையாதலால், இப்புராணத்தின் கடைசியத்தியாயமும் 11 அத்தியாயமாக முடிந்தது. அது பிழை. 4-வது அத்தியாயத்தில் 5-வதும் சேர்ந்திருப்பதை இந்தக் குறிப்பினாலறிந்து, 12 அத்தியாயங்களையும் சேர்த்துக் கொள்ளுதலே பொருந்துவதாம்.

---

Wrapper and Preface alone printed at the
JANANUKOOLA PRESS, Trichinopoly,
the rest printed at Sarada Vilasa Press,
Kumbakonam.

## திருக்கோகர்ணம் ஸ்தலபுராணம்

கிடைக்குமிடங்கள்:—

1. மகா-ள-ள-ஸ்ரீ ராமச்சந்திரய்யரவர்கள்,
பெரிய தெரு, திருக்கோகர்ணம், புதுக்கோட்டை.
2. மகா-ள-ள-ஸ்ரீ பஞ்சாபகேச அய்யரவர்கள்,
மேட்டுத்தெரு, திருக்கோகர்ணம், புதுக்கோட்டை.
3. மகா-ள-ள-ஸ்ரீ A. ராமச்சந்திரய்யரவர்கள்,
ஸ்கூல் மாஸ்டர், மேட்டுத்தெரு,
திருக்கோகர்ணம், புதுக்கோட்டை.

---

## அறிவிப்பு.

இப்புத்தகம் அச்சிட்டதன் செலவுபோக, வரும் ஆதாயத்தில் 100-க்கு 25 வீதம் திருக்கோகர்ணத்தில் வருஷந்தோறும் நடைபெறுகின்ற விநாயக உத்ஸவம், ஸ்ரீசங்கர ஜயந்தி, ஸ்ரீராம நவமி பஜனை யாராதனை என்ற உத்தம தர்ம கைங்கரியங்களுக்கு விநியோகிக்கப்படும். ஆதலால், ஸ்ரீபிரஹதம்பாளின் கருணையையும் மேற்கூறிய தருமப்பயனையும் ஒருங்கேயடையுமாறு கிடைத்திருக்கின்ற இத்தருணத்தில் ஒவ்வொருவரும் இப்புத்தகத்தின் மூலமாகத் தாமும் நன்மை பெற்றுப் பிறர்க்கும் அந்த நன்மையில் பங்களிக்கும் வண்ணம் எனது புதுக்கோட்டை நண்பர்களை வேண்டுகின்றேன்.

தி. கோ. ரா.

---

## குறிப்பு.

இக்கதைப்புத்தகத்தைப்பற்றி சுதேசமித்திரன், ஸௌராஷ்டிர, தமிழ்நாடு முதலிய பல பத்திரிகைகளும் வியந்துள்ளன.

**சிநேகலதை:**—இது கற்புக்கொடியின் புநித சரிதையாகும். இம்மாது ஒரு பிராஹ்மண கன்னிகை. இவளைக்கலியாணம் செய்வதற்கு வரதக்ஷிணை ரூ. 2000 வேண்டுவதாயிருக்கின்றதேயென்று பரிதபித்து தாய் தந்தையர் பிதுரார்ஜித ஸ்தாவரசொத்தை மேற்படி தொகைக்கு ஈடுகாட்டி பந்தகம் செய்து அந்தப் பணத்தைக் கொடுத்து வரனைத்தேடி கலியாணஞ் செய்யவேண்டியதாக நேரிடுகிறதென்று பேசிக்கொண்டிருந்ததைக் கன்னிகை கேட்டுத்தன் மணத்திற்காக அல்லவோ பிதுரார்ஜித சொத்தை இழக்கவேண்டியிருக்கிறதென்றும், தன் பிறப்பினால் தாய் தந்தையர்கட்கு இடமில்லாமற்போகிறதே யென்றும் சிந்தித்து, தன்தேகத்தை அர்ப்பணிப்பதே நலமென உத்தேசித்து அம்மன் திருவடிகளைச்சேருகிறாள். இக்கதை சுருக்கமாயும் விரிவாயும் கவியுடனும் எழுதப்பட்டுள்ளது. இதன் விலை அணா 1 தான். வரதக்ஷிணையின் பலனை இதனால் அறியலாம்!